சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"

VOL - 2. தொகுதி - 2. | April - May எப்பரல் - மே 1914. | No - 9-10. பகுதி - கூ-ய.

ஆலயந் தொழுவது சாலவு நன்று.

உலகந் தோன்றிய நாள் முதற்கொண் டிதுகாறும், கடவுள் ஒருவருண்டு, அவர் தம்மை யன்போடு வழிபடுகின்றவர்க்கு அவர் தம் பக்குவத்திற் கேற்பப் புத்தியையும் முத்தியையு மருளுகின்றாரென்னும் நம்பிக்கை யுடையார் யாவரும் கடவுளை யேகாந்தமான விடத்திருந்து தியானித்து வருகின்றன ரென்பது மிகு பிரசித்தமாய விஷயமாம். கடவுள் அப்பி லுப்புப்போன்று எங்கும் ஏகாசமாய் விளங்குகின்றா ராயினும், அவரை நினைத்த விடத்தில் தியானிப்பது நம்மனோர்க்குக் கூடாதென்று கருதி, உலகியல்பு உயிரியல்பு, கடவுளியல்பு முதலியவற்றை நன்குணர்ந்த பெரியார் காலதேச நிமித்தங்கட் கேற்றவாறு வெவ்வேறு திறத்தினவாய ஆலயங்களை யேற்படுத்தினார்கள். ஒவ்வோர் ஆலயத்தையும் நாம் நன்கு கவனித்துப் பார்ப்போமாயின், அது ஏதோ வொரு பெரிய தத்துவத்தை விளக்குவதற்காகவே அமைக்கப்பட்ட தென்பது நமக்கு நன்கு விளங்குவதாம். ஆரியர்கள் வழிபடும் ஆலயங்களுட் சென்று அங்குள்ள அமைப்புக்களை நோக்குவோமாயின், அத்தத்துவம் மிக வெளிதில் விளங்கும். சிவன்கோயிலில் துவஜஸ்தம்ப மிருப்பதையும் நந்திசிவலிங்கத்தை நோக்கியிருப்பதையும் சிறிதுற்று நோக்குவோமாயின், கடவுளைத் தியானிக்கும்போது துவஜஸ்தம்பம் போன்று அசைபா

திருத்தல் வேண்டும்; நந்திபோன்று மனம் கடவுளை நோக்கியிருத்தல் வேண்டுமென்றற் றொடக்கத்தன விளங்குவனவாம். இவ்வாறே ஒவ்வோரமைப்பும் நமக்குக் கடவுளை வழிபடு முறைகளை நன்கு விளக்குவதாக விருக்கின்றது. இத்தத்துவங்களை நன்கு உணராதவர்கள் ஆலயங்கட்குச் சென்று கடவுளை வழிபடுவது பற்றி யருவருப்புக் கொள்கின்றனர். ஆலயத்திற்குச் சென்று கடவுளை வணங்குவ தெற்றிற்கு? வீட்டிலிருந்தே கடவுளைவழிபடுவது கூடாதோ வெனின், வீட்டிலிருந்து கடவுளை வணங்குவது நம்மனோர்க்குப் பெரும்பான்மையும் அமையாததாம்.

வீட்டிலிருக்கும்போது நம்மனோர்க்குப் பெரும்பான்மையும் குடும்பத்தைப் பற்றிய கவலையே யுண்டாவதன்றிக் கடவுளைப் பற்றிய சிந்தனை யுண்டாவதில்லை யென்பதற்கு ஒரு சாட்சியும் வேண்டுவதில்லையாம். நாம் வீட்டிலிருக்கும்போது என்ன செய்கின்றோம், எதுபற்றிப் பேசுகின்றோம், எதனை நினைக்கின்றோமென்று சிறிது கவனித்துப் பார்ப்போமாயின், அவையெல்லாம் பெரும்பான்மையும் குடும்பத்தைப் பற்றியனவாகவே யிருக்குமென்பது பிறழாது விளங்கும்.

குடும்பக் கவலைக் கடலுள் மூழ்கிப் பரலோகத்தையடைவது பற்றிச் சிறிதுஞ் சிந்தியாது தம் வாழ்நாளை வீணாளாகக் கழிப்பவர்கள் சிலபோதாவது கடவுளை வழிபட்டு நற்கதி யடைவார்களாக என்னும் நற்கருத்துடன் பெரியோர்கள் ஆலயங்களை யேற்படுத்தினர். இவ்வாலயங்களை யேற்படுத்திய காலத்தை வரையறுத்துக் கூறுவது ஒருவாற்றானும் முடியாததாம்.

கடவுளொருவருண்டு; அவர் தவறு செய்பவரைத் தவறாது தண்டிப்பர்; அவர் தம்மை யன்போடு வழிபடுகின்றவர்கட்கு அவர்விரும்பியவற்றையெல்லாந்தகுதியறிந்து தருகின்றாரென்னுந் தீர்மானமுடையாரில்லாத காலமின்மையின், ஆலயமில்லாத காலமுமில்லையாம். மேற்கூறிய தீர்மானமுடையார் கடவுளை வழிபாடு செய்யஏற்படுத்திய விடமேஆலயமாம். இவ்விடத்தை வீட்டின்கண் ஏற்படுத்துவது பலவாற்றானும் தகுதியாயிராமைநோக்கி, ஒருதனியிடம் அதற்கென்றேற் படுத்தப்பட்டது. இவ்வாறேற்படுத்திய விடம் ஆலயமென்று தொன்று தொட்டுச் சொல்லப்பட்டு வருகின்றது. சூரியனைச் சுற்றிப் பூமி சுழலுதலும், பூமியைச் சுற்றிச் சந்திரன் சுழலுதலும், இவைபோன்ற பிறவும் எவ்வாறு தொ

ன்று தொட்டு நிகழ்ந்து வருகின்றனவோ அவ்வாறே ஆலா வழிபாடும் தொன்று தொட்டு நிகழ்ந்து வருவதா மென்பது மக் களியல்பினை நோக்கினல் நன்கு விளங்குவதாம்; ஆனல், அவ் வாலயங்களும் வழிபாடுகளும் காலதேச நிமித்தங்கட்கேற்றவாறு பல திறத்தன வாக விருப்பதாம். இவை பல திறத்தனவாக விருப் பினும், இவற்றின் நோக்கம் கடவுளை யடைவதையே முக்கியமா யுணர்த்துவதாக விருத்தலின், எவ்வாலயத்தையும் எவ்வழிபாட் டையும் ஒருவகையானும் நிந்திப்பதுகூடாது. எம்மதத்தர் ஆலய மும் கடவுளை வணங்கி அவரை யடையும் வழியைக் குறிப்பு வழி யாகவுணர்த்துவதாக அமைந்திருத்தலின், பிறர்வழிபடும் ஆலயத் தைமறந்து மிகழுதல் செய்யாது, நாம் நமக்கென் றேற்படுத்தி யுள்ள ஆலயத்திற்குச்சென்று குடும்பக் கவலையொழியக் கடவுளை மனமொழி மெய்கள் மூன்றும் ஒருமுகப் பட்டு நிற்க வணங்கி வருதல்வேண்டும். நாம் கடவுள் அநந்தா (முடிவற்றவரா)யிருத் தலின், அவரை வழிபடுதற்குரிய மார்க்கங்களும் அநந்தமாயிரு க்கின்றன; நதிகளனைத்திற்குங் கடலே முடிவிடமாக விருப்பது போல மார்க்க மனைத்திற்கும் கடவுளே முடிவிடமாகவிருக்கின்று ரென்று நிச்சயித்து, அவ்வாறு வணங்கி வருவோமாயின், மனம் ஒருமுகப் படுவது பெற்றுக் கடவுளருளுக்குப் பாத்திராதற் குரியவராவோம்.

நாம் நம் வீட்டிலிருந்து கடவுளைக் குறித்த நோத்தில் வழி பாடு செய்தல் கூடாதோ? ஆலயத்திற்கேன் போதல் வேண்டு மென்று வினவுதல் கூடும். இங்கு வீடு என்னும் பதம் விடுதலை யென்னும் பொருளுடையதாக விருப்பினும், அது நமக்குப் பந் தத்தையே மேலும் மேலும் விளைவிப்பதாக விருத்தலின், அதன்க ணிருந்து எவ்வாறு கடவுளைச் செவ்வையாக வழிபடுதல் கூடும்? வீட்டினை நன்றாகக் கட்டல்வேண்டும்; வயலுக்கெருவினை நன்ருகப்போடல் வேண்டும் என்றற் றொடக்கத்து வியவகார த்தை நெய்விட்ட நெருப்புப்போல வளரச்செய்து பந்தத்தை மிகுவிக்கும் வீட்டின்க ணிருந்து கடவுளை வழிபடுவது நம்ம னோர்க்கு முடியாத காரியமாம்; ஆகவே, நாம் மனம் ஒருமுகப் பட்டுக் கடவுளை யடைதற் பொருட்டு ஆலயத்திற்குச் சென்று கடவுளைப் பெரியார்கூறியவாறு வணங்குதல்வேண்டும். இங்குப் பெரியாராவர் முக்கியமாக நமது தந்தையாரேயாவர். அன்னையார்

வாயிலாகத் தந்தையா ரிவரென்றறிந்தாற் போலத் தந்தையார் வாயிலாகக்கடவுளிவரென் றறிதற்குரியவராக விருக்கின்றோம். நம் மனோர்க்கு அன்னையார் தந்தையாரை யறிவிப்பதும் அவர்கடவுளை வழிபடு மார்க்கத்தை யுணர்த்துவதும் தொன்று தொட்டு நடை பெற்று வருதலின், நாம் கடவுளை வழிபடுமிடமாகிய ஆலயமும் தொன்றுதொட்டிருத்தல் வேண்டுமென்பது சொல்லாமலேவிளங் குவதாம். தொன்று தொட்டு நடைபெற்றுவரும்ஆலயவழி பாட் டால்விளையும் நன்மையை ஆஸ்திகர்யாவர்க்கும் ஞாபகப்படுத்துவ தற்காகவே இன்ன ஆலயமெனக் குறிப்பிடாது பொதுவாக "ஆல யந் தொழுவது சாலவு நன்று" என்றருளிச் செய்தார், நம்ஞானத் தாயாகிய ஔவைப் பிராட்டியார். ஆலயம் என்பதன் பொருள் தங்குமிடம் என்பதாம்; யார் தங்குமிடம் என்னும் வினவிற்கு விடை கடவுள் தங்குமிடம் என்பதாம். கடவுள் தங்குமிடமென் னும் பொருளுடையதாம் கோயிலென்னும் சொற்றொடரும். (கோ-கடவுள், இல்-இடம்). உயிர் உடம்புமுற்றும் வியாபித்திருப் பினும், இருதய கமலத்தின் (மனத்தின்) கண் விசேடமாக விளங் குவதுபோல, கடவுளும் உலகமுற்றும் வியாபித்திருப்பினும் ஆல யத்தின்கண் விசேடமாக விளங்குகின்றார். அவர் அங்கு விசேட மாக விளங்குவதாற்றான் பக்தியோடு வழிபடுபவரதுமனம் அங்கு விரைவில் ஒரு முகப்படுகின்றது. சூரியனது கிரணம் சூரியகாந் தக் கண்ணாடிவாயிலாக விசேடமாக வெளிப்படுவதுபோல, கட வுளது கருணையும் ஆலயவாயிலாக விசேடமாக வெளிப்படுகின் றது. இப்பிறப்பின் பயனை ஆலயத்திற்குச் சென்று கடவுளை வழி படாதவர் ஒருவகையானு மடைவதில்லையாம். புறத்தேயுள்ள ஆலயத்திற்குச் சென்று அங்கு உருவமாகவோ அருவமாகவோ இருப்பதாகப் பாவிக்கப்படுங் கடவுளை ஆசை கோபம் அகந்தை முதலியவற்றை யொழித்து மனத்தாற் சிந்தித்து, வாயால் வாழ்த் திக் காயத்தால் வணங்கினாற்றான், அகமாகிய (உடம்பாகிய) ஆல யத்தில் ஆநந்த சொரூபமா யெழுந்தருளி யிருக்குங் கடவுளை விரைவிற் காணுதல் வாய்ப்பதாம். கடவுள் சுத்தராகவிருப்பதால், நாம் அவரை வணங்க ஆலயத்திற்குப் போகும்போது சுத்த ராகப்போதல் வேண்டும். சுத்தமுடையார்க்கும் சுத்தமுடையார்க் குமன்றி அசுத்தமுடையார்க்கும் சுத்தமுடையார்க்குஞ் சிநேக முண்டாவதொருபோதுமின்றன்றோ? நாம் ஆசை கோபம் அகந்

தை முதலியவற்றால் அசுத்தராக விருக்கும் பரியந்தம், கடவுளது சிநேகத்தைப் பெறுவதுகூடாதாம். இதுபற்றித்தான் பெரியார் ஆலயத்திற்குப் போம்போது ஸ்நானஞ்செய்து, நல்லுடைதரித்து, நற்சிந்தையோடு போதல் வேண்டும்; அங்கு அசுத்தமாய செயல்களுள்ஒன்றுஞ்செய்தல் கூடாது என்று கட்டளையிட்டனர்.

"வாழ்த்த வாயு நினைக்க மடநெஞ்சுந், தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனை (கடவுளை)" மனமொழி மெய்கள்ஒருமுகப்பட்டு வணங்குவதற்கிடம் சிறப்புவகையாக ஆலயமன்றி மற்றொன்றாகாமையின், குறித்தகாலத்தில் ஆலயத்திற்குச் சுத்தமாகச் சென்று சர்வ மதத்திற்குஞ் சாட்சியாக விருந்து அநுக்கிரகஞ் செய்யுங் கடவுளை மனமொழி மெய்களொத்துவர மிகவும்வணங்குவது நம்மனோர்க்கத்தியாவசியகமான கடமையாம். இஃதில்லாவிட்டால், நாம் நற்கதிபெறுவது ஒரு வாற்றானுமின்றாம். இது பற்றித்தான் உலக நீதி "கோயிலில்லா ஊரில்குடி யிருக்க வேண்டாம்" என்று கூறுகின்றது.

எங்கும் எள்ளிலெண்ணெய் போல வியாபகமாயிருக்குங் கடவுளை யோரிடத்திருப்பதாகப் பாவித்து வணங்குவது தவறாகாதோ வெனின், இது தியான விலக்கண மறியாதவரது கூற்றாம். கடவுளை இருதயம், கண்டம், புருவமத்திய மென்னுமிடங்களுள் யாதாவதோரிடத் திருப்பதாகப் பாவித்தாலன்றி வேறுவகையாகத் தியானிப்பது கூடாமையின், தியானத்தின் பொருட்டுக் கடவுளுக் கோரிடத்தைக் கற்பிப்பது ஒரு வாற்றானுங் குற்றமுடையதன்றாம். சுருக்கமுடையது பெருக்கமாயிருத்தற்குரிய தாகாது; பெருக்கமுடையது சுருக்க மாகத்தோன்றுதற் குரியதா மென்பது விளங்கினால், ஆலயத்தில் கடவுளிருப்பதாகப் பாவித்து வணங்குதல் தவறுடையதாகா தென்பதுவிளங்கும். பெருக்க (வியாபக) மாயுள்ள ஆகாயம் ஊசியின் காதில் சுருக்கமாகத் தோன்றுவதுபோல, பெருக்கமாயுள்ள கடவுளும் ஆலயத்தில் சுருக்கமாக விளங்குகின்றார். மோகத்தின் வசப்பட்டுச் சுருங்கிய வடிவினராக விளங்கும் நாம் வியாபகமாயுள்ள கடவுளை வியாபகமாகத் தியானிப்பது கூடுமோ? கூடாமையின், அவரைச் சுருங்கிய வடிவினராகப் பாவித்தாற்றான் தியானித்தல் கூடும்.

நினைப்பது என்றவிடத்து, யார், எதனுல், எங்கே, எப்போது, எதனையென்னும் வினக்கள் நிகழுமன்ரே? கடவுளை வணங்குமிடத்தும் இவ்வைந்தும் வேண்டப்படுவனவாம். இவ்வைந்திற்கும் விடைமுறையே நாம், மனதால், ஆலயத்தில், குறித்தகாலத்தில், கடவுளையென்று பெறப்படுவதாம். இவ்வாற்ருல் கடவுள் காலதேசங்கட்குக் கட்டுப்பட்டிருக்கின்ருரென்று பாவித்தாலன்றி, அவரை வணங்குதல் முடியாதென்பது செவ்விதின் விளங்குவதாம்.

வீட்டிலிருக்கும்போது நமக்குக் கடவுளைப் பற்றிய ஞாபகம் பெரும்பான்மையு முண்டாவதில்லையாம்; ஆலயத்திற்குப் போயவிடத்தோ அவரைப் பற்றிய ஞாபகம் தொடர்ச்சியாக வுண்டாகின்றது; அது தொடர்ச்சியாகவுண்டாவதால், நாம்பழிபாவங்கட்கஞ்சி யொழுக வேண்டும், கடவுளது கருணைக்குப் பாத்திராதல் வேண்டும் என்று கருதி அவரை யன்போடு வணங்க முயலுகின்ரேம்.

புத்தகமானது தன்னிடத்துள்ள அர்த்தங்களைத் தன்னைப் படிப்பவர்க்கு அவரவருடைய அறிவின்தன்மைக் கேற்ப வுணர்த்துவதுபோல, ஆலயமும் தன்னிடத் தெழுந்தருளி யிருக்கும் கடவுளின் ஞாபகத்தைத் தன்னை வணங்குகின்றவர்க்கு அவரவருடைய அறிவின்தன்மைக்கேற்ப வுணர்த்துகின்றது. இதனுற்ருன் ஆலயத்திற்குப் போவார் யாவரும் ஒரு திறத்தினராகாதிருக்கின்றனர். ஆலயத்திற்குக்கடவுளைவணங்கச்செல்லுவோர்பலதிறத்தினராகவிருப்பினும், அவரது நோக்கம் கடவுளைவணங்கி நற்கதி பெறவேண்டு மென்பதாக விருத்தலின், ஆலயத்திற்குச் செல்வது எவ்வகையானும் பழுதுடைய தன்ரும். இஃது ஆலயத்தைக் கண்டவுடனே நமக்குத் தெய்வசிந்தனையுண்டாவதைக்கவனிப்போமாயின், நன்கு விளங்கும்.

எவ்வாற்ருனும், ஆலயத்திற்குச் சென்று கடவுளை வணங்குவது மிகவும் நன்மையைத் தருவதாக விருத்தலின், இதனை மறவாது மேற்கொண் டொழுகுகின்றவர் தவருது நன்னிலையினை யடைவாரென்பது பிறழாத சித்தாந்தமாம்.

"முன்னவ னுர்கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்

கன்னங் களவு மிகுத்திடுங் காசினிக்
கென்னரு ணந்தி யெடுத்துரைத் தானே."

என்று திருமந்திரங் கூறுவது இங்கு நன்குணர்தற் பாலதாம்.

குசேலர் சரித்திரம்.

(முன்தொடர்ச்சி.)

அக்குழந்தைகட்குப் பாலே மணியாகிய ஆபரணமே யன்றி வேறோ ராபரண மில்லை; மரவுரிகள் ஆடையாவதின்றி மற்ற ஆடைகள் கிடைப்ப தில்லை; இலையாகிய உண்கலமே யன்றி வேறு உண்கலம் கிடைப்பதில்லை. அவர் வீட்டுக்கு வருகின்ற ஓ ரெறும்பிற்கும் அங்கு ஒருணவும் கிடைக்க மாட்டாது. அந்த அன்னப்பால் சிறிதாகக் கிடைப்பதே யல்லாமல் ஆவின் பால் கிடைப்பதேயில்லை. அக்குழந்தைகளுக்கு எஞ்ஞான்றும் பசிதீர்ந்த பாடில்லை. இவ்வறுமையை நோக்கிவரும் குசேலரும் அது பற்றி மனவருத்தங் கொள்ளுவதில்லை. அவரது செய்கையை நோக்கிவரும் சுசீலைக்கும் அவர்மீது அன்பு நீங்குவதில்லை. வருவாய் மிகுதி யுடையவராய் அளவிறந்த செல்வத்தோடு வாழ்வார்க்கும் தமது அன்புள்ள ஒரு குழந்தையைஅஃது எண்ணியவாறு கேட்கும் பொருளைக் கொடுத்துக் காப்பாற்றுதல் முடியா தாகுமாயின், யமன் போலும் ஆலகால விஷம் போலும் வடவைத் தீப்போலும் வந்து துன்பத்தில் நிலைபெறச் செய்கின்ற வறுமைக் காலத்தில் பல பிள்ளைகளை யுடைய சுசீலையின் செய்கை எத்தன்மையதாய்? அந்தோ! அச்சுசீலை தம் பிள்ளைகளுக்குத் திருப்தி யுறுமாறு நடந்து கொள்ளுதல் எவ்வாறு கூடும்? இங்ஙனம் சுசீலை தரித்திர மென்னும் பெருங் கடலுள் மூழ்கி யிருந்தும், தங் கணவராகிய குசேலரை வெறுத்துப் பேசார்; அவர்மீது பழிச் சொற்களைச் சிறிதாயினுங் கூறார்; தம் புதல்வரிடத்து வெறுக்கத் தக்கன வற்றை மறந்துஞ் செய்யார். அச்சுசீலையின் நற்குணத்தை எவ்வாறு அளவிட்டுரைப்பது கூடும்? ஆயினும், அச்சுசீலைக்கு இத்துன்பக் கடலை எவ்வாறு நீந்திக் கடப்போம் என்னும் ஒரு எண்ணம் உள்ளத்தில்

எக்காளும் நீங்காதிருந்தது. கற்பிற் சிறந்த அருந்ததி முதலிய பெண்மணிகளும் புகழுஞ் சிறப்பினை வாய்ந்த சுசீலை வறுமைக் கடலுள் மூழ்கி யிருத்தலால் மனம் புண்பட்டு வருத்த முற்றிருந்தார்; இவ்வாறு பல நாட் சென்ற பின் ஒருநாள் சமயமறிந்து வறுமைக்கடலினின்றும்நீந்திக் கரையேறும்வழியைஇவரிடத்துக் கேட்போமென்று மனந்துணிந்து; குசேலரை யன்போடு வணங்கி, அவரது முகத்தை நோக்கித் தாம் எண்ணியவற்றைக் கூறத் தொடங்கினர். காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என்னும் ஆறு உட்பகையினையும் வென்றவரே! கருங்கடலும் விரும்பும் கரியதிருமேனியை யுடைய பகவானது இணையடித் தாமரைகளை யென்றும் பிறவிப்பிணியொழியத் தியானித்துத் துதிப்பவரே! மறைகளெல்லாம் உணர்ந்த மாதவரே! சிங்கம், சரபம், புலி, யானை யென்னு மிவை வசிக்கும் காட்டிற் சேர்ந்து சருகையும் நீரையும் காற்றையும் உண்டு கடல் போன்று அளவிறந்துள்ள இருவினைகளுக்கு உறைவிடமாய சரீரத்தை வருத்துகின்ற தவத்தை யுடையவரே! பிரமனை யொத்துப் பரிசுத்தமாக விளங்குகின்றவரே! கந்தையை யுடுத்தித் தவஞ்செய்யும் முனிவர்களுள் ஒப்பில்லாது விளங்கும் நற்றவ முடையவரே! நீர் மனைவிமக்களிடத்தில் ஆசையில்லாதிருக்கின்றீர்; அன்னியரிடத்துச் சென்று யாசித்தலை ஒழித்துவிட்டீர்! சுவாமிகளே! யான் அவற்றை அறிந்திருக்கின்றேன்; ஆயினும் வறுமைப் பிணியால் துன்பமுற்ற மனத்தோடு சொல்லும் என்வார்த்தைகளை அன்போடு கேட்டருளல் வேண்டும். ஆகவநீயம் தக்ஷிணாக்கினியம்காருகபத்தியம்என்னும் முத்தழல்களையும் வளர்க்கும்முனிவரே! நமது குழந்தைகள் துன்பத்தில் அழுந்துமாறுஎழுகின்ற பசியை ஒழிக்கும் பொருட்டு அன்ன மில்லாது வருந்துகின்றனர். பதினெண் புராணங்களையும் நன்குணர்ந்த பெரியார் அன்னத்தினுல் உயிர் உடம்பில் நிலைபெறு மென்று கூறுகின்றனர். அஃது உண்மையேயாகும். நான்குவேதங்களும் உயிர்களெல்லாம் இன்பத்தினுல் மனமகிழ்ந்து நன்ருக வாழுக என்று கூறுகின்றன. ஆதலால் அதற்கு மாறில்லாமல், தேவர் போற்றும்சிறப்பமைந்த புகழை யுடையவரே! மழலைச் சொற்களை யுடைய நம் மைந்தர்களை மேன்மையாகக் காப்பாற்றுதல் தங்கள் கடமையாகும்

தேவரும் வணங்குவதற்குரிய சிறந்த தவத்தையுடையவளே! இவ்வுலகத்திலுள்ள எத்தன்மையினரும் வறுமையுடையவர் பாவிகளென்றும் செல்வமுடையவர் புண்ணியரென்றும் கூறுகின்றனரல்லவா? தரித்திரமானது மிகுந்த அழகினைக் கெடுத்து சரீரத்தை யுலரும்படி வாடச்செய்கின்றது. அளவில்லாத சோம்பலை யுண்டாக்குகின்றது. லோப குணத்தை மிகுதியாகச் செய்கின்றது. மணவாளன் மணவாட்டிகளுக்கிடையே தடுப்பதற்கரிய பலகலகங்களை உண்டாக்குகின்றது. அவமானத்தையும் பொய் பேசுதலையும்பேராசையையும் விளைவிக்கின்றது. ஆதலால் தரித்திரத்திலும் கொடுமையான ஒன்று யாதிருக்கின்றது? ஒன்றுமில்லையன்றோ? மேலும் தரித்திரமானது சந்தோஷமாகிய கடலை வற்றச்செய்வதற்கு ஒரு வடவைத் தீயாயிருக்கின்றது. ஐயோ, ஒன்றும் கிடைக்கவில்லையே யென்று பலவாறான எண்ணங்கள் உண்டாவதற்கு உறைவிடமாயிருக்கிறது. பல திறத்தனவாகிய துன்பங்கள் உண்டாவதற்கும் ஓரிடமாயிருக்கின்றது. நல்லொழுக்கமென்னும் வனத்தை எரித்தொழிப்பதற்கு நெருப்பாயிருக்கின்றது. தீமையைத் தருவனவாகிய எல்லாவற்றினும் மிகத்தீயதாம். ஆதலால் அத்தரித்திரத்தை நீக்குதல் நன்மையாகும். யாதவர்குலத்திற் றோன்றிய அரசர் யாவர்க்கும் அரசனாகிய கண்ணபிரானோடு பல சாஸ்திரங்களைச் சாந்தீப முனிவரிடத்துத் தாங்கள் கற்றீரென்று உலகத்தார் கூறுகின்றனர். ஆதலால் அப்பீதாம்பரதாரியாகிய கண்ணபிரானிடத்திற் சென்று அவனிடத்துப் பெருஞ்செல்வத்தைப் பெற்றுவந்து நமது குழந்தைகளுடைய தரித்திரமாகிய நோயை ஒழித்தல்வேண்டும். இளமைப் பருவத்தில் தங்களோடு கூடிச் சாந்தீப முனிவரிடத்துப் பெருநூல்களைக் கற்ற கண்ணபிரான் தங்களைக் கண்டவளவிலேயே நமக்கு வேண்டிய செல்வங்கள் எல்லாவற்றையும் கொடுத்தருள்வான். இதிற் சிறிதும் சந்தேகமில்லை. குற்றமற்ற சிநேகிதனொருவனைப் பெற்றிருத்தல் பெருஞ்செல்வக் குவியலைப் பெற்றாற் போல்வதாம் என்று அறிஞர் கூறுகின்றனர். அவர் கூறுவது மெய்யேயாகும்; பொய்யாகாது. கண்ணபிரான் சுவர்க்க மத்திய பாதாளமென்னும் மூன்றுலகத்தாரும் அஞ்சுமாறு தீச்செயல்களைச் செய்துவந்த கஞ்சன் முதலாயினோரை அழித்து நன்மார்க்கத்தில் ஒழுகுவோர் இன்பமடைய அவர் வேண்டியவற்றையெல்லாம் கொடுத்

தருளுகின்றனாதலால் அவரிடத்தில் தாங்கள் சென்று செல்வம் வேண்டுமென்று பிரார்த்தித்தால் தங்களுக்கும் தாங்கள் வேண்டிய செல்வத்தைக் கொடுப்பர். அச்செல்வத்தைத் தங்களுக்குத் தரமாட்டேனென்று கூறுவாராயின் அவரது பாதத்தைத் தரிசித்தலே மோட்சத்திற்குக் காரணமா யமையும். கண்ணனை, நீலமணி போன்றவனை, நாடோறும் போற்றுகின்ற குற்றமற்ற தவத்தினையுடையவர் தம் உள்ளத்தில் நினைத்தவற்றை நினைத்தவாறே அவருக்குக் கொடுப்பவனை யடைந்து நம் குழந்தைகள் தரித்திரத்தினின்றும் நீங்குமாறுதாங்கள் செல்வத்தைப்பெற்று வரவேண்டுமென்று கூறினள். தம் மனைவியான சுசீலை இவ்வாறு கூறியவளவில் குசேல முனிவர் கூறுவாரானார். மக்கட்பொருட் டிரங்கி வாடும் மடமையை யுடையவளே! யான் கூறுவதைக் கேட்பாயாக. முற்பிறப்பில் மிகுதியான தருமத்தைச் சிறப்பாகச் செய்தவர்கள் இப்பிறப்பில் இன்பமெல்லாவற்றையும் அநுபவிப்பர். அவ்வாறு செய்திராராயின் துன்பமெல்லாவற்றையும் அநுபவிப்பர். இது பற்றி மனம் வருந்துவதற்குக் காரணம் யாது?

> "இலர் பல ராகிய காரண நோற்பார்
> சிலர் பலர் நோலா தவர்."

என்று உத்தரவேதம் கூறுவதை நீ யறிந்திலையோ? சுசீலையே! இப்பூமியிற் பிறந்தவர் யாவரும் நமக்கு இதுவேண்டும் அது வேண்டுமென்று மிகுதியும் எண்ணுகின்றனர். அவர்கள் எண்ணியபடி அது முடிவு பெறுகின்றதோ? அஃதெவ்வாறு முற்றுப் பெறுவதாம்? எம் பெருமான் ஒருவனுக்கன்றி மற்றவர்க்கு அது முடியாது. அவ்வாறு முடிந்தால் கீழோர் மேலோ ரென்னும் பகுப்புக்கள் உலகத்தில் உண்டாகாதன்றோ? மேலோர் முற்பிறப்பில் செய்த தீவினை நல்வினை யென்னும் இரண்டையும் பாவ புண்ணிய மென்று கூறுகின்றனர். சக்ரபாணியாகிய பகவான் இப்பிறப்பில்அவரவர் செய்த தீவினை நல்வினைக் கேற்றவாறு தரித்திரத்தையும் செல்வத்தையும் கொடுத்து ஜீவர்களை யெல்லாம் காப்பாற்றுகின்றனன். (வரும்).

Self Confidence

" தன்னம்பிக்கை."

உலத்திலே அரிய பெரிய காரியங்களைச் செய்பவர் யாவரும் தன்னம்பிக்கை யுடையவர்களேயாவர். தாங்கள் நினைத்ததை முடிக்கும் ஆற்றல் தங்களிடம் எவ்விதத்திலும் அமைந்திருக்கின்றதென்றுதிட்டமாய் நம்புபவர்கள், பலஇடையூறுகளால் மனமுடைந்து போகாது, உலையாமுயற்சி யுடையாராய் ஊழையும் உப்பக்கங் காண்பரென்பது திண்ணம். தன்னம்பிக்கை பற்றவர்கள் சீக்கிரம் ஊக்கங்குன்றி 'என்ன செய்யலாம், அதிர்ஷ்டமில்லை' என்று எடுத்த காரியத்தை முடியாது போவார்கள். ஒன்றைச் செய்யாதிருப்பது எளிது, செய்வது அரிது; இதனாலன்றோ, "செயற்கரிய செய்வர் பெரியர், சிறியர் செயற்கரிய செய்கலதார்" எனப் பொய்யாமொழியும் பிறந்தது. இறந்த மீன் நீர்ப்போக்கில் மிதந்து போவதும், உயிருள்ள மீன் மாத்திரம் நீரோட்டத்துக்கு நேராய் எதிர்த்துப் போவதும் காட்சிப் பிரமாணந்தானே !

முதுகெலும் பின்றி நன்றாய் நிற்க முடியாததுபோல, தன்னம்பிக்கையின்றி, எடுத்துக்கொண்ட காரியத்தை இனிதாய் முடிக்க இயலாது. தன்னம்பிக்கை மாத்திர மிருந்து, சரீரஹானி ஏற்படினும், நினைத்த காரியம் சித்திபெறும். உதாரணமாக, ஜான் பனியன் 'பரதேசியின் மோக்ஷப்பிரயாணம்'(Pilgrim's progress) என்ற அரிய ஆங்கிலக் கிரந்தத்தை ஜெயிலில் அடைப்பட்டிருந்த பொழுது, கழிவு காகிதத்தில் எழுதி இப்பொழுது இரண்டு நூற்றாண்டுசுமாராகக்கழிந்துவிட்டது. இதற்குள்ளாக, அது உலகத்தில் பல பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுப் பிரபலமாயிருப்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. இம்மட்டோ! கண்ணொளி மறைந்த பொழுதுகூட, ஆங்கில நல்லிசைப் புலவராக இப்பொழுது மதிக்கப்படும் மில்டன் "Paradise Lost" என்ற நூலை உலகிற்கு உபகரித்ததற்குக் காரணத்தை அடிப்படையில் கவனிக்கும்பொழுது, தன்னம்பிக்கை யாகவன்றோமுடியும்! இவை போன்று எத்தனையோ கூறலாம். நம்பிக்கையின் விசித்திர மென்னே!

நிற்க, தன் பலத்திலோ திறமையிலோ சாமர்த்தியத்திலோ ஒவ்வொருவரும் நம்பிக்கை வைக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அப்படி நம்பிக்கையில்லாதவர்கள் இந்த நிமிஷ

முதலே நம்பிக்கை வைப்பது நலம். இங்ஙனஞ் செய்யாது, 'காலம் கெட்டுப்போய் விட்டது', 'யோக்கியனுக்கு இது காலமில்லை'' 'பொய்யும் புரட்டும் மிஞ்சி விட்டது' என்பவாதிய பல மொழிகளைப் புகல்வதால், என்ன பயன்? தீமையே தவிர நன்மையில்லை. ஆகலின் அவற்றை நாம் உபயோகிக்காமலும், உபயோகிப்பவரிடம் நெருங்காமலுமிருத்தல் நன்று. எதிலும் பிரகாசமான பாகத்தையே (bright side) பார்க்கவேண்டும்.

சந்தேகம் பய மென்பவற்றைப் பிறர் நம்மிடம் விதைக்கவொட்டாது கவனமாயிருக்க வேண்டும். இல்லாவிட்டால், ஜெய மென்றபயிர் இக்களைகளால் மூடப்படும். மேலும், அதைரிய மென்ற பூச்சியை அணுகவிடலாகாது; பயிருக்கு உரமும் வெயிலும் மழையும் எல்லாம் தன்னம்பிக்கையே. கோடீஸ்வரனிடம் தன்னம்பிக்கையில்லையாயின், ஒன்றும் செய்ய சக்திவராது; அருமையான மானிடப்பிறப்பின் பயன் நிச்சயமாய் நமக்குக் கிடைக்குமென நம்பி, தெய்வபக்தி இராஜபக்தி முதலியவற்றோடு, வாழ வேண்டிய வண்ணம் வாழ்ந்தால், நிச்சயமாய் நற்கதி யடையலாம். 'எண்ணிய வெண்ணியாங் கெய்துப' என்ற திருவள்ளுவரின் பொய்யா மொழி நன்கு கவனிக்கத்தக்கது. நல்லெண்ணங்களையே நாடி அவற்றை நாடோறும் நன்கு சிந்தித்து நல்லனவற்றைப் பிறர்க்குச் செய்யவும், நாம் பெறவும் 'தன்னம்பிக்கை' நம்மிடம் குன்றுதிருக்கப் பரமேஸ்வரனைப் பிரார்த்திப்போமாக.

நெல்லை. மாணிக்க வாசகன்.

பூங்காவனம்.

(முன் தொடர்ச்சி)

ஆனால் இரண்டாங் கடிதத்தில்யாது வரையப்பட்டிருந்தது எனலும், அவள் ஓ! அதிலா? அருட்பிரகாசம் எனது தமையனாகிய அருளானந்த முதலியாரால் முன்னர்க் கற்பித்த காலவெல்லை நெருங்கி விட்டதென்றும், தான் பூங்காவனத்தை முன்னர் நேசித்திருந்ததில் அப்பொழுதும் அற்பமேனும் மாறவில்லையென்றும், அவளை விவாகஞ் செய்தற்காக அடுத்த கப்பலில் வருகிறேனென்றும் எழுதியிருந்தான். எனது சகோதரர் தமது குமாரிக்குக் காட்டாது அதை மறைத்து வைத்ததற்கு, நான் மிகவும் சிர

மப்பட்டேன் எனலும்; சிசுபாலன் அப்படியானுல் அவன் இரத்தின புரிக்கு வரவில்லையா? என்றுன். மங்களம் இல்லை; அப்படி யொன்றும் நடக்கவில்லை. அஃது எனக்கு மிகவும் சந்தோஷம்; அவன் வந்தவுடன் சமாசாரப்பத்திரிகைகளில் விவாகத்தைப்பற்றிப்பிரசுரஞ் செய்திருப்பதைக்கண்டு விசாரித்த பொழுது சரியென்று கண்டனன் போலும்! அன்றி அங்கு வந்திருப்பானுயின் அது அவனது மடமைத்தனமாயிருக்கும். தற்போது பூங்காவனமும் அவனும் நடந்து கொள்ளுகிற மாதிரிதான் சரி. அது வியக்கத்தக்கதாயுமிருக்கின்றது. ஜமீன்தாருக்கு இஃது ஏதாவது சந்தேகத்தைக் கொண்டு வருமோ என்னவோ தெரியவில்லை என்றுள். ஆனுல் அருட்பிரகாசமும் பூங்காவனமும் முன்னர் நேசித்திருந்தவர்களென்றது பெரிய தந்தையாருக்கு அற்பமேனும் தெரியாதா? அவள் ஓ! இது எனக்கு நிச்சயமாகத்தெரியும். பூங்காவனத்தின் விவாகம் முடிந்தவுடன் அவள் தந்தையாருக்கு, தனது முற்காரியங்களுள் ஒன்றையும் நாயகருக்கு அறிவிக்கமாட்டேனென்றும் தன்னுடைய செய்கைகளினுல் முன் வேறொருவரை விசுவாசித்திருந்ததாக ஒரு காலத்தும் காட்டமாட்டேனென்றும் வாக்குப் பண்ணியிருந்தாள். தம்பி! இந்த இரகசியங்களையெல்லாம் உனக்கு வெளிப்படுத்தி விட்டேன். இதற்கு யாது செய்யலாம் எனலும், சிசுபாலன் இச்சம்பவங்களெல்லாம் காத்திரப்பிரகாரம் நான் அறிந்தபடியால் இப்போது என்னசெய்பலாமென்றுசொல்ல முடியவில்லை. ஆனுல் நான் அருட்பிரகாசத்தைத் தனிமையிற் சந்தித்து இச்சம்பவங்களைக் குறித்து வினவி உண்மையாகவிருந்தால் அவனை இங்கே நிற்காது பிறவூருக்குப்போய் ஒரு காலத்தும் இங்கு வராதபடி கேட்கப்போகின்றேன் என்று கூறினுன். அப்பொழுது மங்களம் பதறி, தம்பி! நீ எவ்விதமாயாவது அருட்பிரகாசத்திடத்து என்னைப் பிடித்துக்கொடுத்துவிடாதே! அவன் என்னைவிசுவாசமாயும்கௌரவமாயும்மதித்திருக்கின்றுன். இதுவேயல்லாமல் வேறு யாருக்காவது மறந்தும் சொல்லிவிடாதே என்றுள். அதற்கு அவன் இச்சம்பவங்களையெல்லாம் இரகசியமாக வைத்திருப்பேனென்று கூறி அவளிடம் விடைபெற்றுக்கொண்டு இவைகளைப்பற்றி ஆலோசித்து, தோட்டத்தின் வேறொரு பக்கமாகப் போயினுன்.

அங்கு ஜமீன்தாராகிய வீரசிங்க முதலியார் ஒரு செடிப்புற மாக என்றும் விட்டுப்பிரியாத இராசா என்னும் செல்வப்பெயரு டைய நாயகன்பின்வர ஏதோ ஆழ்ந்த யோசனையுடன் வந்தார். அவ ருக்கு முன்பாக எப்பொழுதும் காணும் காட்சிகளே அதிகமாகப் பிரமிக்கச்செய்து கொண்டு வருகின்றன. அவருக்குண்டான மனக்கவலைக்கு ஒரு நிவாரணம்செய்து கொள்ள முடியாமற் போயி ற்று. அப்பொழுது எதிர் முகமாகவந்த சிசுபாலன் ஐயா! என்று கூறிக்கொண்டு சமீபத்தில் வந்து ஏது மனவாட்டமுடையவர்க ளாக விருக்கின்றீர்கள் என்றான். அதற்கு அவர் குமாரனே! சில சம்பவங்கள் நடக்கின்றன. அவை இவையென என்னாற் கூற முடியவில்லை. தற்செயலாக நீ சந்தித்ததைப்பற்றிச் சந்தோஷப் படுகின்றேன். குமாரனே! நீ என்னை விசுவாசிக்கின்றாய்; உன்னு டைய தற்பெருமையில்லாத மேன்மையான குணத்தைக் காட்டி வருகின்றாய்; இப்படியே உனது தம்பி அருட்பிரகாசமும் இருக் கும்படி கடவுளைப் பிரார்த்திக்கின்றேனென்றார். அப்பொழுது அவன், எங்கள் குடும்பத்துக்கும் இந்நாட்டினர்க்கும் தலைவரும் உபகாரியுமாகிய பெரிய தந்தையே? அருட்பிரகாசம் தங்களை நேசி ப்பதையும் கனம் பண்ணுவதையும் குறைத்து விட்டானோ வென லும், அவர் சிசுபாலனே! இங்கு நடந்து வருகின்ற சம்பவங்களு ளொன்றையும் நீ கவனிக்கவில்லை போலும். அவன்பெரிய தாயா ரை அவமரியாதையாக நடத்தி வருகின்றான். ஏற்கனவே நடந்து வருவதைப் பார்த்தால் அஃது அவன் வெட்கத்தினால் அவ்வாறு நடந்தான் போலிருந்தது. இப்போது பத்துநாட்களாய் விட்டன; வரவரச்சந்தோஷமாய் வருவதைவிட்டு மனதுக்குள் பகை சாதிக் கின்றவனாய்க் காணப்படுகின்றான். பூங்காவனமோ தனது பெருந் தன்மையினால் அப்படியல்லவென்று மறுக்கின்றாள். நான் இது விஷயத்தில் கண் மூடிக்கொண்டிருத்தல் கூடாது. அவன் மிக வும் நன்றியற்றவனாக விருக்கின்றான். அதை என்னாற்றாங்கிக் கொள்ளல் முடியவில்லை எனறார். சிசுபாலன் தாழ்மையுடன் கனம் பொருந்திய பெரிய தந்தையே! தாங்கள் எனது சகோதரனில் வெறுப்புக் காட்டவேண்டாம். என்னுடைய தன்மை முழுவ தும் தங்களுக்குத் திருப்தியல்லவா; அதினிமித்தமாக வாவது எனது சகோதரனுக்குச் சகாயம் செய்யும்படி வேண்டுகின்றேன் என்றான். அதற்கு அவர் தம்பி! உனது சகோதரனுக்காக நீ

இதிற் பிரவேசித்தல் வேண்டாம்; அவனது நடத்தை என்னற் றுங்க முடியவில்லை. அது பூங்காவனத்துக்கு மாத்திரமல்ல எனக்கும் வந்த விருந்தினர்க்கும் அவமானமாக விருக்கின்றது. நான் சந்தோஷக் கொண்டாட்டத்தின் பொருட்டு அழைப்பித்த விருந்தினர்க்கும்தைரியத்தைக் குறைத்து விட்டானே எனலும், சிசுபாலன் ஐயா! இது விஷயத்தில் நான் ஒருஆலோசனை சொல்ல உத்தரவு தருகின்றீர்களா வென்றான். அதற்கு அவர் பெருந் தன்மையான குமாரனே! நீ கூறியது எனக்கு உன்னை நம்பிக்கை யுள்ளவனாக்கி விட்டது. உனது சகோதரன் எனதுவிவாகத்தில் வெறுப்புற்று அதைஎனதுநாயகியிடத்துக்காட்டுகின்றானென்பதை நீ நம்பவில்லைபோவெனலும்; அவன் ஐயா! அப்படியிருக்கமாட்டா தென்று நிச்சயமாகச்சொல்லுவேன். அவன் பெரிய மனதுடைய வன்;இப்படிப்பட்ட எளியசெய்கையை என்னுற்கு அவனுடைய நற்குணம் விடமாட்டாது. அவனது மாதிரிகளை அறிந்த என க்கு இந்த முழு மர்மங்களின் இருப்பிடம் இன்னதெனச் சாடை யாய் விளங்குகின்றதென்றான்; அப்பொழுது ஜமீன்தார் மரு ட்சியாய் யாது உனக்குத்தெரியுமா அது என்ன? சகோதரன் மீது கொண்ட விசுவாசத்தினுல் உண்மையை நீ கவனிக்கவில்லை போலும் எனலும்; சிசுபாலன்ஐயா! எனது சகோதரனே வென் றால் இயல்பாகவே வெட்கமுள்ள வாலிபனாக விருக்கின்றான். அதனால் தன்னுடைய நடவடிக்கைகள் தப்பிதமாக வெண்ணப் படுமோ வென்று அஞ்சுகின்றான். எப்பொழுதும் அவன் இப் படித்தான்; அவனுடைய அறிவு அவனைத் தூரத்தில் விட்டுவிடு கின்றது; அவனுடைய அறியாமை நடத்தை மீறி நடக்கின்றா னென்பதைக் காட்டுகின்றது என்றான். அதற்கு அவர் குமா ரனே! எனது தீர்மானமும் அப்படித் தான். பார்க்கிற வரையில் நான் நினைத்தது நிச்சயமல்லவெனலும்; அவன் ஐயா! நான் சொல்லுவதை ஆறுதலாய்க் கேளுங்கள்; எனது சகோதரன் இர ண்டு வயசுக்கிளையவன்; பிரதேசசஞ்சாரியாக விருந்தும் லௌகிக ஞானம் அற்பமேனும் இல்லாதவன்; பாருங்கள் தனக்குஇனத்த வளும் இளம் பெண்ணுமாகிய பெரிய தாயாருக்கு முன்பாகச் சடுதியாகக் கொண்டுவரப்பட் டிருக்கின்றான். அவனுடைய எண் ணம் தானிருக்கிற மாதிரிக்கு அவளைவந்து உரிமைகொண்டாட வேண்டியதேயன்றித் தன்னுடைய கட்டாயமல்லவென்று என்

னுகின்றான் போலும்; நிச்சயமாகப் பெரிய தாயாரின் மாதிரியைக் கண்டுதான் அவனும் இப்படிப் பின் வாங்குகின்றான் என்றும் கூறினன். இவைகளைக் கேட்டவுடன் ஜமீன்தார் சிறிதுநேரம் ஆலோசித்துக் குமாரனை விளித்து, சிசுபாலனே! நீ கூறுவது சரிதான். அவன் இங்கேவந்தவுடன் பூங்காவனம் இனவுரிமையாய் நடத்தவில்லை யென்பது எனது ஞாபகத்துக்கு வருகின்றது. நீ சொல்லுகிறதிலும் அதிகம் உண்மையிருக்கின்றது. பூங்காவனம் தான் குற்றவாளியாகக் காணப்படுகின்றாள் என்றார். அவன் ஆம் அருட்பிரகாசம் பெரியதாயார் தன்னளவில் குற்றமாக நடந்து கொண்டாளென்பதை அறிந்துகொண்டான் போலும் என்றவன். இவைகளைக் கேட்ட ஜமீன்தார் குமாரனே! நான் ஒரு மடையனுய் விட்டேன். நீ சொல்லுமுன் எனக்கு இந்த யோசனை வரவில்லையே; ஆனல் அஃது இயல்புதான். அவன் தன்னைப்பெரிய தாய் பொருட்படுத்தாது விட்டனள் என்றெண்ணிக்கொண்டான். அவன் வரும்பொழுது எங்களிருவரிடத்தும் அபிமானமுள்ளவனுகத்தான் வந்திருத்தல் வேண்டும். பெரியதாயைக் கண்டவுடனே அவன் மனம் மாறிவிட்டது; அவள் இம்மாளிகைக்குத் தலைவியாக விருந்தும், அவனை அசட்டை செய்தது குற்றந்தான். இதனாலே அவன் தன்னை மேன்மை சாரப்படுத்திக்கொண்டான் என்பது நன்குவிளங்குகின்றது. அருட்பிரகாசத்தின்மீது ஒரு காலத்தும் குற்றமில்லை. பூங்காவனமே குற்றவாளியாகக் காணப்படுகின்றாள். இப்பொழுதேநான்போய் இதைப்பற்றி அவளிடம் பேசப் போகின்றேனென்று ஆரவாரித்தார். அப்பொழுது சிசுபாலன் அவரது கால்களைப்பிடித்துக் கொண்டு ஐயா! நான் சொல்வதைக் கேட்பதாக முன்னமே கூறி யிருக்கின்றீர்கள் எனவும், அவர் நீ தான் தபாளகுணமும் புத்தியுள்ளவனுமாயிருக்கின்றாய்; சொல்லு உன் எண்ணத்தை நான் கேட்கின்றேன் என்றார். அவன் ஐயா! தங்களைப்போல நானிருப்பேனாகில் தங்கள் மனைவியார் துன்படையும்படி ஒன்றுங் கூறமாட்டேன். அவள் ஆதரணை இல்லாததினாற்றான் அருட்பிரகாசம் இப்பொழுது தூர நிற்கின்றான் என்று நான் விளங்கினதாக ஒருகாலும் காட்டமாட்டேன். பின்னை நான் செய்கின்றதென்னையெனின் அவர்கள் இருவரையும் தனிமையில் விட்டு அவள் தனது பாராமுகத்தைக் காட்டாமலும் அவன் தனது அறியாமையைக் காட்டாமலும் இருவரும் உறவு

முறையாகப் பேசிக்கொள்ளும்படி விட்டு விடுவேன். இவ்வளவு ஆடம்பரமும் சந்தோஷமும் அமைதியுமுள்ள குடும்பத்தில் இப்படியான வித்தியாசமிருக்க விடுவது பரிதாபமாய் முடியுமெனலும், ஜமீன்தார் குமாரனே! உன்னுடைய யோசனைவியக்கத்தக்கதே; நான் அதை உவந்தேற்றுக் கொள்கின்றேன் என்று கூறினர். பிறகு தந்தையும்மைந்தனும் மாளிகைக்குச்சென்றனர். அக்குத் திவான்பகதூர் அம்பலவாணபிள்ளை அவர்களும் மற்றும் பிரபுக்களும் சீமாட்டிகளும் தத்தம் இருப்பிடங்களுக்குப் புறப்பட்டு விட்டார்கள். ஜமீன்தார் பத்தினி சிசுபாலன் அருட்பிரகாசம் மங்களம் முதலாயினோர் அவர்களை மாளிகை வாயில் வரையில் அழைத்து வந்து உபசரித்து அனுப்பிவிட்டனர். அவர்கள் சென்ற சிறிது நேரம் வரை இவர்கள் அவ்விடத்துத் தாமதித்து நிற்கும் போது, ஜமீன்தார் சொன்னதாவது நமது தோட்டத்திலுள்ள நிலாவரையென்னும் வாவியின் ஊற்று பெருகிவரும் விநோதத்தை எல்லோரும் வாருங்கள் சென்று பார்ப்போம்; சிசுபாலன் தன்து பிரியசிநேகிதனுகிய சிற்றம்பலத்துடன் ஒரு வழியாகச் செல்லட்டும்; அருட்பிரகாசமும் பெரிய தாயாரும் மற்றொருவழியாகச் செல்லட்டும்; மங்களத்தம்மாளுக்கு நான் வழிகாட்டி அழைத்து வருகிறேன் என்றார். அருட்பிரகாசம் பெரிய தந்தையார் கூறியதைத் தடுக்க முடியாமல் அவ்வண்ணமே பூங்காவனத்தை அழைத்துச் செல்லும் பொழுது பேசிய பொதுவிஷயங்களுக்கெல்லாம் அவள் ஓர் அசைச் சொல்லினால் விடை பகர்ந்தாள். இவ்வாறு இவர்களிருவரும்வாவியைக் கிட்டினார்கள்; மற்றையோரும் அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். சிலநிமிஷம் அவ்விடத்தில் எல்லோரும் தங்கிநின்று வெவ்வேறு வழியாகச் சென்றுவிட்டார்கள். ஆனால், பூங்காவனமும் அருட்பிரகாசமும் வேர் முளைத்து நின்றபாவனைபாய், தத்தம் மனதில் பயங்கரத் தோற்ற முண்டாகத் தவித்து நிற்கின்றனர்.

ஆறும் அதிகாரம் முற்றிற்று.

மா. சிவராமலிங்கம் பிள்ளை.

சூரியனும் ஒட்டகமும்.

கிடைத்ததில் திருப்திகேடிலதாகும்.

ஒரு காலத்தில் ஒரு ஒட்டகம் சூரியனை நோக்கி, "ஆதித்தனே! அருணனே! பகலவனே! பாநுவே! கதிரவனே" என்று அவன் திருநாமங்களைத் துதித்து நமஸ்கரித்து, எருமை, பசு, எருது முதலிய மிருகங்களை நீ அவைகளுக்குத்தக்க கொம்புகளுடன் சிருஷ்டித்திருப்பது போல என்னையேன் சிருஷ்டிக்கவில்லை? எனக்கும் கொம்பிருக்குமாயின் அதன் உதவியால் நான் என் பகைவர்களிடமிருந்து என்னைக் காத்துக்கொள்வே னல்லவா? எனவ்வாறு செய்யவேண்டும்" என்று கேட்டது. அந்த ஒட்டகத்தின் பேச்சைக் கேட்ட சூரியன், அதனைப்பார்த்து, "மூட ஒட்டகமே! என்னால் எவை யுனக்குக் கொடுக்கப்பட்டனவோ அவை யாவும் நன்றாக யோஜித்தே கொடுக்கப்பட்டன; கிடைத்ததைக் கொண்டுத் திருப்தியடைய வேண்டாமா? அப்படி யிருப்பதை விட்டு ஒரு காரணமுமின்றிப் பிறர்க்குக் கொடுக்கப்பட் டிருப்பவைகளைக் குறித்து நீ யாசிப்பது சரியல்ல; ஆகையால் நீகொண்ட இந்த மூடத்தனமான கைரியத்திற்குத்தக்க தண்டனையை யடைவாயாக" என்று கூறிக்கோபங் கொண்டு "உன் செவிகள் குட்டையாகக்கடவன; நீயும் அதிகமான சுமையைச் சுமக்கக்கடவாய்" என்று சபித்தான்.

கருத்து.

இவ்வுலகத்தில் கடவுளாலெதுவெது கொடுக்கப்பட்டதோ அதுவது அவரவருக்குத் தக்கவாறே கொடுக்கப்பட்டதாம். கடவுள் தாம் செய்யவேண்டியதைத் தெரிந்தே செய்திருப்பார்; அவர் ஒருவர் பக்ஷமாக எதையும் செய்யார் ஆகையால் கடவுளால் தமக்குக் கொடுக்கப்பட்டதில் திருப்தியடையாமல், அதனை மாற்ற முயல்பவர்கள் யோசனை சிறிதுமில்லாத மூடர்களே யாவார்கள். அவ்வாறு செய்யப்படும் பிரயத்தனம் பயனற்றதாவதுமல்லாமல் துக்கத்தையும் கொடுக்கும்.

நாரையும் அதன் குஞ்சுகளும்.

தனக்குத் தானே துணையென நம்பு.

நாரைப்பக்ஷி யொன்று ஒரு வயலில் கூடுகட்டி அதில் குஞ்சு பொரித்து வசித்துக் கொண்டிருந்தது. அவ்வயலில் விளைச்சல் அறுவடையாகும் காலம் நெருங்கியது. அப்பொழுது அந்த நாரை யானது நம்முடைய குஞ்சுகளுக்கு இன்னும் சரியானபடி இறக் கை முளைக்கவில்லை; இப்பொழுது இவ்வயலை அறுத்து விடுவார் களேயானால் எல்லோருக்கும் நாசமுண்டாகும் என்றெண்ணிப் பயந்து, தன் குஞ்சுகளைப்பார்த்து, "நான் வெளியே இரைதேடப் போயிருக்கும் சமயத்தில் இங்கேயார் வந்து என்னபேசிக்கொண் டிருந்தாலும், அதனைக் கவனித்துக் கேட்டிருந்து நான் வந்ததும் என்னிடம் நினைவாய்ச் சொல்லவேண்டும்" என்று தெரிவித்தது; குஞ்சுகள் அவ்வாறே செய்கின்றோமென்றொப்புக் கொண்டன. அப்பால் ஒருநாள் வழக்கம்போல நாரை இரைதேட வெளியே சென்றது. அப்பொழுது குஞ்சுகளுக்கு எச்சரிக்கை செய்து சென்றது. நாரை வெளியே சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் இந்த வயலுக்குச் சொந்தக்காரனும் அவன் மகனும் அங்கு வந்து வயலைச்சுற்றிப் பார்த்துவிட்டு ஓரிடத்துட்கார்ந்து, "நாளைக்கு வயலை யறுவடை செய்யலாம்; ஆட்களுக்கு இன்றே சொல்லிவிட வேண்டும்" என்று பேசித்தீர்மானஞ் செய்து கொண்டார்கள். இச் சம்பாஷணையைக் குஞ்சுகள் கேட்டுக்கொண்டிருந்து நாரை வந்த தும் தெரிவித்தன. நாரை! நீங்கள் "பயப்படவேண்டாம்; இந்த வய லின் சொந்தக்காரன் வயலை யறுப்பதற்குப் பிறருடைய சகாய த்தை விரும்புகிறானல்லவா? ஆகையால், இந்த வயல் நாளைக்கு அறுவடையாகாது." என்று நினைக்கின்றேன், "பிறகு பார்த்துக் கொள்வோம்" என்றுகூறிச், சமாதானப்படுத்திற்று. மறு நாள் வழக்கம்போல நாரை இரைதேடப் புறப்பட்டது. அப்பொ ழுது குஞ்சுகளை நோக்கி, முன்போலவே எச்சரித்துவிட்டுச்சென் றது. நேற்றையதினம் தீர்மானித்தபடியே வயலுக்குச் சொந்தக் காரனும் அவன் மகனும் வந்து தங்களுடைய ஆட்களின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். வெகு நேரமாயும் ஆட்கள் வரவில்லை, சூரியனும் உச்சிக்குவந்து விட்டான். ஆகையால்சொந் தக்காரன் தன் மகனை நோக்கி, நாம் இஷ்ட ஜனங்களின் உதவியை நாடியது தவறு; நம்முடைய உறவினர்க்கு இன்றே தெரிவித்து

விடு; ஸஹாயம் செய்ய வருவார்கள். நாளையதினம் எவ்வாறேனுந் தவறாது வயலை அறுத்துவிடுவோம்'' என்று கூறினான். மகன் அப்படிச்செய்வதுதான் நன்று என்றுகூறினன். பிறகு இருவரும் தம்வீடுசென்றனர்.

இதனைக் கேட்டுக்கொண்டிருந்த குஞ்சுகள் பயந்து எப்பொழுது நாரை வருமோ என்று அதன் வருகைக்கு எதிர்பார்த்தவாறிருந்தது. அப்பால் நாரை தன் வழக்கம்போல இரைதேடிக்கொண்டு கூண்டிற்குள் பிரவேசித்தது. குஞ்சுகள் தாம் கேட்டுக்கொண்டிருந்தவைகளைச் சிறிதும் பிசகாமல் தெரிவித்தன. நாரை, ''நீங்கள் பயப்படவேண்டாம்; பந்துக்கள் தங்களைச் சேர்ந்தவர்கட்கு முயற்சியொடு சகாயம் செய்வார்கள் என்பது நிச்சயப்படாது. ஆகையால் நீங்கள் நாளைக்கும் அவர்கள் இங்கு வந்து பேசிக்கொள்வதைக் கவனித்து எனக்குத்தெரிவியுங்கள்'' என்று கூறிற்று. மறுநாள் வழக்கம்போல நாரை வெளியே சென்றது. வயலுக்கு வழக்கம்போலச் சொந்தக்காரனும், அவன் மகனும் வந்து தங்கள் பந்துக்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் வராமற் போகவே, தந்தை மகனைப்பார்த்து ''நாம் ஒருவருடைய சகாயத்தை விரும்புவதே கூடாது; நம்முடைய காரியத்தை நாமே செய்து கொள்ளவேண்டும், ஆகையால் நாளையதினம் நாமே ஆளுக்கொரு அரிவாள் எடுத்துக்கொண்டு வயலை அறுத்து விடுவோம்'' என்றனன். மகனுஞ் சம்மதித்தான். இருவரும் பிறகு வீடு சென்றனர்.

இப்படியாகவே, நாரை வந்ததும் குஞ்சுகள், நடந்ததைத் தெரிவித்தன. நாரை ''இனி நாமிங்கிருப்பது கூடாது. எவனொருவன் தன் காரியத்தை தானே செய்யத் தீர்மானிக்கின்றானோ அவன் அக்காரியத்தில் சித்திபெறுவான் என்பது நிச்சயம்'' என்று கூறித் தன் குஞ்சுகளுடன் அப்பொழுதே அவ்வயலிலிருந்து, வெளிப்பட்டுவேறிடத்திற்குப் போய்விட்டது.

கருத்து.

நாம் ஒரு காரியத்தை நிறைவேற்றச் சமர்த்தர்களாயிருக்கும்போது சிநேகிதருடைய சகாயத்தையும் பந்துக்களுடைய சகாயத்தையும் தேடுவது வீணும். அங்ஙனமே எவனொருவன் பிறருடைய உதவியை நாடுகின்றானோஅவன் மூர்க்கன்போலத் தன்னு

டைய காரியத்தைத் தொடங்காமலிருப்பது, சிரத்தையில்லாமை ஆகிய இரண்டு குறைகளுக்குள்ளாகின்றான். எவன் தன் காரியத்திற்குத் தன்னையே விசுவசிக்கின்றானோ அவன் சம்ஸயமின்றித் தன் காரியத்தை முடிக்கின்றான். முயற்சியினால் எல்லாக்காரியங்களும் சித்தியாம். அப்படிச் செய்யாதது நம்முடைய குற்றமேயாம்.

பிரசூத வேதனையால் பீடிக்கப்பட்ட ஒரு மலை.

ஆடம்பரத்தா லாம்பயனில்லை.

ஒருமலை சிறிதுகாலமாகச் சப்திந்துவந்தது. அதைக் கேட்ட எல்லோரும் அம்மலையில் மிகவும் உயர்ந்த வழுது ஏதோ உண்டாகப்போகிற தென்று கருதி, அதனருகே வந்து குடி புகுந்தனர். கடைசியில் ஒரு எலி அதிலிருந்து ஓடிவரக்கண்டு யாவரும் வெட்கமடைந்தனர்.

கருத்து.

அதிகாரம் வகித்த சில புருஷர்கள் அநேகவிதமான ஹிதத்தை ஜனங்களுக்குச் செய்பவர்போலப் பெரிய ஆடம்பரஞ் செய்கின்றார்கள். ஜனங்கள் அதுகண்டு மலைத்து அவர்களை விசுவசிக்கின்றனர். அதிகாரமடைந்த ஆடம்பரக்காரன் தன் காரியமுடிந்ததும் ஆடம்பரத்தை அடக்கிக்கொண்டு இருக்கிற இடந்தெரியாமவிருந்து விடுகின்றான். ஆகையால் ஆடம்பரத்தைக் கண்டு மலைப்பது கூடாது.

நாராயணசாமி ஐயர், முடிகொண்டான்.

ஸ்நுஷாவிஜயம்.

(முன்தொடர்ச்சி).

நுராசை:—அவனுக்கு அப்படிப் பட்ட கிலேச முண்டாகப் பார்த்துச் சகிப்பேனா? யாராவதொரு தாசியுடன் சேர்த்து வைக்கின்றேன்.

சாருவிருத்தை:— (தனக்குள்) சஷ்டம்! துராத்மாக்களான மாமிகளால் (நாயாரால்) புத்திரனுக்கு அதர்மமான தாஸியின் சேர்க்கையும் விருப்பப் படுகிறது; தர்ம பத்தினியின் ஸம்பந்தம்

விரும்பப்படவில்லை. (பிரகாசமாக) வீணான வார்த்தைகளால்பயன் என்ன? என்வார்த்தையை அங்கீகரிக்காவிடின், நீ உன் பிள்ளை மனதிற்கும் அருவருப்பான கீர்த்தியையாவது அபகீர்த்தியை யாவது அடைவாய். (போகிறாள்.)

துராசை:—(முன்னேபார்த்து தனக்குள்)இதோ என்பிள்ளை வருகிறான். இப்பொழுது கபடமாய் அழவேண்டும்.

(அழுகிறாள்).

ஸுகுணனென்று பெயருள்ள புத்திரன் பிரவேசிக்கிறன்.

ஸுகுணன்:—அம்மா! ஏன் அழுகிறாய்?

துராசை:—குழந்தாய்.! எதற்காகக்கேட்கிறாய்? உன்மனைவி அறிந்தால், உன்னிடம் ஆசைவையாள்?

ஸுகுணன்:—அம்மா: சொல்! சொல்.

துராசை:—உன் நிமித்தம் நான் மிகுதியும்பிரயாசைப்பட்டு, நற்குணமுடையவளென்றுஒரிடமிருந்து எவளைத் தேடிக் கொண ர்ந்தேனோ அவளே இப்பொழுது எனக்கு அவமானத்தைச் செய்து ஆதிபத்தியத்தையும் விரும்புகிறாள்.

ஸுகுணன்:—அம்மா! எல்லா மாதாக்களாலும் புத்திரன் நிமித்தம் ஒரு கன்னிகை ஓரிடமிருந்து தேடப்படுகிறாள். இவ் வழி எல்லோராலும் அனுபவிக்கப் படுவதுதான். அப்படிப்பட்ட அவர்களுக்கு வீட்டில்ஆதிபத்தியமும் கிரமமாய் உலகில் அறியப் பட்டது தான்.

துராசை:—அடே! அடே! மூர்க்கா! நானிருக்கும் பொ ழுது அவளுக்கு ஆதிபத்தியத்தை எப்படி விரும்புகிறாய்?

ஸுகுணன்:—அம்மா! விருத்தர்களாயும் புத்தியுள்ள வர்களாயுமுள்ள தாய்தந்தையர் சிரமபரிஹார நிமித்தம் புத் ரன் மருமகளுடைய சிரஸில் குடும்ப பாரத்தை ஒப்புவிக்கின் றனரன்றோ?

துராசை.—அறியாதவனே! மனைவிக்குக்கிருஹாதிபத்தியத் தைக கொடுத்துவிட்டு, பொருளை யெல்லாம் மைத்துனனுக்குக் கொடுக்க விருப்புகிறாய் போலும்!

இதனைக்கேள்:—தினந்தோறும் இவள் ஆதரவின்மையால் அநேக பாத்திரங்களை உடைக்கிறாள். உன் மனைவி ரஹஸ்யத்

தில் தனத்தை அபஹரித்துத் தன் தகப்பன் வீட்டிற்கு அனுப்புகின்றாள். உன்னால் அதிகக் கொழுப்பை வஹிக்குமவள் என்னைச் சிறிதும் லக்ஷியம் செய்வதில்லை.

ஸுகுணன்:—அம்மா! கிருஹபார மெல்லா வற்றையும் அவள் சிரஸில் வைத்தால், ஒன்றையும் ஒருவனுக்கும் கொடுக்க மாட்டாளென்று நினைக்கின்றேன்.

துராசை:—(ஹாஸ்ய காரத்துடன்) கஷ்டம்! மூடா! அவள் மந்திர தந்திரத்தால் மோஹித்து அவள் மாயவலையில் சிக்கிக் கொண்டாய் நீ!

ஸுகுணன்:—அம்மா! மந்திர தந்திர மின்றி நாயகன் நாயகியுடன் ஆசையுடையவனாக ஆகமாட்டானா? என் சகோதரிக்கு அவள் நாயகன் எப்படி வசியனானான்?

துராசை:—அடே மூர்க்கா! என்ன சொல்லுகிறாய்? உன் மனைவிபோல் என்பெண்ணும் நாயகனிடத்தில் மந்திர தந்திரப் பிரயோகத்தைச் செய்தால் வசியனாவன்றான். அதனை அநுசிதமாக நினைத்துத் தன்குணங்களாலேயே நாயகனை ஆராதிக்கிறாள். அவனோ அவளுக்குக் கீழ்ப்படிய வில்லை. உன்னைப் போல் என் மாப்பிள்ளையும், மனைவிக்கு அடிமையாக இருந்தால் ஞாபக சித்த முள்ள நான் ஒருத்தியுடைய வார்த்தையையும் சொல்லமாட்டேன்.

சுகுணன்:—மாப்பிள்ளை பெண்ணுக்கு வசியமாக விராதறிந்து மருமகளிடத்தில் துவேஷங் காட்டினால் என்ன பிரயோஜனம்?

துராசை.—அடே! அடே! வார்த்தையால் என் வார்த்தையை மறைக்க விரும்புகிறாயா? கேளடா! அவள் தந்தை மிகத் துஷ்டனென்று அறியாயோ? மாதாவும் கெட்டபுத்தியுடையவளென்பது உலகப் பிரசித்தமல்லவா? சகோதரன் விடனென்பதும் சகோதரி வியபிசாரிணீ யென்பதும் பிரசித்தம். குழந்தையான நீ அவள் குலத்தை அறியவில்லை யல்லவா?

சுகுணன்:—அம்மா? உன்பெண்ணினிடம் அவள் மாமி கோபங்கொண்டால், அவளும் நம்முடைய குலத்தை இப்படித்தானே நிந்திப்பாள். எல்லாவற்றையும் விசாரித்துத் தான் என் நிமித்

தம் அவள் சிறந்தவளென்று ஒப்பி விக்கப்பட்டாள். இவளை அடிக்கடி இப்படிச் சொல்லுவது தகுதியல்ல.

துராசை:—நானென்ன செய்வேன்? புருஷர்களுக்கு மனைவி வாய்ப்பது அவர்கள் பாக்கியத்தைப் பொறுத்ததாம்.

ஸுகுணன்:—(தனக்குள்) எல்லாவிதத்தாலும் குரு (தாய் தந்தையர்) ஆராதிக்கத் தக்கவர்களாகையால், இந்த என் அன்னைக்கு நல்லவார்த்தையைச் சொல்லுகிறேன். உன்னால் தேடிக் கொண்டுவரப் பட்ட மருமகள் கெட்ட குணமுடையவளாக வாவது நல்ல குணமுடையவளாகவாவது இருக்கட்டும். இவளிடம் உன்பெண்ணிடம் நீ கொள்ளும் பொறுமையைப் பாராட்ட வேண்டும். (பாதங்களில் விழுகிறான்).

துராசை:—அடே! மூர்க்கா! எழுந்திரு, எழுந்திரு. எங்கே யோ இருந்து வந்த கெட்டவளான உன்மனைவியை என் வயற்றி லுண்டான பெண்ணுக்கு ஸமானமாகக் கொள்ள எப்படி முடியும்?

சுகுணன்:—எங்கேயோ இருந்து வந்த மாப்பிள்ளையிடம் புத்திரனைக் காட்டிலும் அதிக அன்பை நீ எப்படிக் கொள்ளுகின்றாய்?

துராசை:—என் மாப்பிள்ளை என்ன அபராதத்தைச் செய் கிறான்?

சுகுணன்:—அம்மா! முன் ஒரு சமயம் தெய்வாதீன மாக நான் மறைந்து கொண்டு செவிகொடுக்க நேரிட்டது; அப்பொழுது உன் பெண்ணிடம் கோபங் கொண்டு உன் மாப் பிள்ளை "†தேவடியாள் மகளே! சீக்கிரம் இங்கே என்னிடம் வா என்று கூறிய வார்த்தையைக் கேட்டு நீ சிரித்தாயல்லவா?

துராசை:—நான் மறைந்து கொண்டு கேட்கும் பொழுதென்று ஏன் பொய் சொல்லுகிறாய்? இந்த வார்த்தையை உன்னிடம் விசுவாசித்து உன் மனைவி பொய்யாகக் கூறியிருக்க வேண்டும்!

ஸுகுணன்:—(தனக்குள்)— உலகத்தில் ஒரு மாதாக்குப் பிரீதி ஸ்தானமாக அவளுடைய பெண் ஏற்படுவதால், பெரியோர் களால் நிந்திக்கப்பட்ட தீயவழியை அடைந்த மாப்பிள்ளையின் நிந்தைமொழியும் ஸ்துதிபோல் நினைக்கப்படுகிறது. அவன் கெட்ட குணங்களும் நற்குணங்களைப்போல் கிரஹிக்கப்படுகின்றன.

† விடனென்றால் தாசியைத்தொடரும் புருஷன் என்பது பொருள்.

தேசாபிமானமும் ஒற்றுமையும்.

ஸஹோதரர்களே !

இதுகாறும் நீங்கள் யாவரும் பரீட்சையில் என்ன கேள்விகள் வருமோ, யாம் எப்படி விடையளிக்கப் போகிறோமோ என்று ஆற்றொணாத் துக்கமும் பயமும் பிடித்து நிலைகலங்கியிருந்தீர்கள். தற்போது அப்பயம் நீங்கப்பெற்று உங்கள் அரிய காலத்தை மேனாட்டுப் பெருமக்கள் எழுதிய நவீன புத்தகங்களையும் நம் பெரியார் எழுதிய நன்னூல்களையும் பழுதறக்கற்று உங்கள் புத்தியை விருத்திசெய்தல் அத்தியாவசியமாகின்றது. இத்தகைய புத்தகங்களுள் தேசாபிமானம், இராஜ பக்தி முதலிய சிறந்த நற்குணங்கள் உங்கள் மனத்துள் பசுமரத்தாணி போன்று பதியுமாறு போதிப்பனவற்றைத் தேர்ந்து படித்தல் வேண்டும். தேசாபிமானம் என்பது தேசத்திற்குரிய அபிமானம் அல்லது தேச ஒற்றுமையைத் தேடும் நல்லெண்ணம் எனப் பொருள்படுகின்றது. தேச ஒற்றுமையில்லாவிடின் நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் ஸித்திபெறாது. நம்முடைய தேசம் பல பிரிவுகளாக ஆக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு பிரிவுகளும் பல ஜில்லாக்களாகவும், அப் பற்பல ஜில்லாக்களும் பற்பல டவுன்களாகவும் அப் பற்பல டவுன்களும் பற்பல கிராமங்களாவும், அந்தப் பற்பல டவுன்களும் கிராமங்களும் எண்ணிறந்த வீடுகளாகவும், அவை யாவும் பற்பல குடும்பங்களாகவும் பிரிக்கப்பட்டு அக்குடும்பங்கள் நாமின்றி ஆகாதாகலான், இத்தேசத்திற்கு நாம் ஒவ்வொருவரும் இன்றியமையாதவர்களாகிறோம் என்பது தெற்றெனப் புலப்படுகின்றது. ஒரு குடும்பத்திலுள்ள பலரும் தங்களுக்குள்ளேயே கலகப்பட்டுக்கொண்டு ஏனைய ஒவ்வொருவருக்கும் தீமைவருமாறு குரூர காரியங்களையே புரிந்துகொண்டு, இவ்விதம் பல நாட்களாக அத்தீக்குணத்தையே தம்மனத்துள் வளரவிட்டுக்கொண்டிருப்பார்களானால் அக்குடும்பம் ஒருகாலும் நல்ல ஸ்திதிக்கு வராமல் நாசமுற்றுக்கெட்டு அண்டைவீட்டுக்காரருக்கு அக்குடும்பத்திற்குரிய சொத்துக்களும் வீடுகளும் எவ்வாறு பராபாத்யமாகிறதோ அவ்வாறே நம் தேசம் என்ற பெரிய குடும்பம் ஒற்றுமையில்லாத வாஸிகளால் நாசமுற்று ஒற்றுமை யுடையவர்களாகிய அந்நிய

நாட்டார்களுக்குப் பரபாத்யமாயிற்று. ஒற்றுமை, தேசாபிமானம் என்ற சீரிய குணங்கள் நம்மிடத்தில்லாது போயினமையின் நமது தேசம் 2000 வருடங்களாக அந்நிய நாட்டார் வசமாகிவிட்டது. தேசாபிமானமே ஒவ்வொருவருள்ளத்திலும் பதிந்து உள்ளூறிப் பற்பல நற்குணங்களுக்கு உறைவிடமாகி ஒற்றுமையென்ற தன்மையை வளர்த்து வரத்தக்கது. அதை நம்முள் பழக்கிக்கொண்டால் எவ்வுலகங்களிலும் நாமே முத்தோர்கள்; நாமே புஜபலபராக்கிரம சாலிகள்; நாமே நற்குணசாலிகள்; நாமே எத்தகையசெயலும் செய்யவல்ல சீரிய மகான்கள்; நம்மைப் பலதேமுசம் வணங்கும்; நம் பெரும்புகழும் எங்கணும் பாவும். வியாபாரம், கைத்தொழில், முதலிய எக்காரியங்களிலும் நம்மினும் உயர்ந்தார் காணக்கிடையார். மற்றுத் தேசாபிமானம் அறம் வளர்க்கும் தாய். தேசாபிமானமே சென்ற விடமெல்லாம் நற்பெரும் புகழும் தரத்தக்க நன்னெறி. தேசாபிமானமே நாளுளும் சுரந்து இல்லையெனுதபடி வரம்பின்றித் தரும் கற்பதரு. தேவருலகத்தும், பரதேசங்களிலும் இன்பமே கொடுப்பது இந்தத் தேசாபிமானமேயாம். மற்று இத்தேசாபிமானம் வேறு எதைத்தான் பயவாது? இத்தேசாபிமானம் நமக்கு மிகவும் இன்றியமையாததன்றோ?

வகைமாண்ட நேடுந்திரைக்குத் தகைமாண்ட பாவைபோலச் சீரும் சிறப்பும் ஒருங்கே அமையப்பெற்று, உலகிலுள்ள எல்லா அரசர்களின் விருப்பத்திற்கு மிலக்காக விளங்கும் நம் இந்தியா என்னும் தெய்வத் தன்மைபொருந்திய தேசத்தின் குழந்தைகளாகிய நமக்குத் தேசாபிமானம் என்ற பாவை அழகுசெய்விக்காவிடில் நாம் அடையக்கூடிய கதிகளை எடுத்துச் சொல்ல எட்டாறு வாயிருந்தாலும் போதாவாம்.

சகோதரர்களாகிய நாம் நம்முள்ளேயே விவாதங்களைத் திருப்திகரமாய்த் தீர்த்துக்கொள்ளாமல் தற்போது எத்தனையோ பேர்கள் கோர்ட்டுகளில், பன்னாள் வருந்திப்பெற்ற செல்வத்தை மனச்சலனம் சிறிதுமின்றி வாரியிறைக்கின்றனர். ஒரு குடும்பத்துள் செல்வம் எவர்க்கதிகமிருப்பினென்? சொத்து நற்காரியங்களில் செலவிடப்படுகின்றதா என்பதைக் கவனித்து, என் பணம் உன்பணம் என்றிராது யாவர் பணமும் ஒருவர் செல்வமாகி ஒற்றுமையுடன் வாழவிரும்புவதே மேன்மை தங்கிய காரியம். நம்

முரிலேயே எத்தனை பேர், எனக்கு இருகண் அவிபினும் அண்டை வீட்டுக்காரனுக்கு நான்கு கண்கள் அவிதல்வேண்டும் என்றிருப்பவர்? நாம் எக்காலத்தும் தைரியத்திலேனும், நிலைமையிலேனும், செல்வத்திலேனும், கல்வியிலேனும், மதா சாரத்திலேனும், ஆளுந் திறமையிலேனும் மற்று நவீனமாகக் கண்டு பிடித்தலிலேனும் குறைவுபட்டவர்களல்லர். அந்த அரிய குணமாகிய தேசாபிமானமும் ஒற்றுமை இல்லாது போயினமையாலன்றோ பல விதமான கேட்டிற்கு நாம் உறைவிடமாயினோம்?

மேனாட்டு மக்களிடம் ஒற்றுமையும் தேசாபிமானமும் இருப்பதாற்றான் எங்கேயும் எப்போதும் எதனாலும் வெற்றியே பெற்று வருகிறார்கள். என்ன ஊரில் என்ன தாங்கள் செய்தாலும் தங்கள் தேசத்தின் பொருட்டே யாகும். அவர்களுக்கு நேற்று இன்று வந்த குணம் அல்ல அந்தத்தேசாபிமானம்; ரோமாபுரிவீரனாகிய ஜூலியஸ் ஸீஸர் படை யெடுத்த அப்போது முதல் இன்றைய வரையில் தேசாபிமானம் என்ற விலையுயர்ந்த பட்டங்கியை யணிந்து விளக்கமுறுகின்றனர். தங்கள் தேசத்துள் தங்களுக்குள் எவ்வளவு சண்டைவரினும் மத ஸம்பந்தமாகவோ மற்றும் எவ்விதமாகவோ இருந்தாலும் தங்கள் தேசம் பிறதேசத்தாரால் அபகரிக்கப்படப் பார்ப்பார்களோ? 16ம் நூற்றுண்டின் இறுதியிலும் 17-ம் நூற்றுண்டின் துவக்கத்திலும் இங்கிலாந்தில் பெரும்போர் புரிந்துகொண்டிருந்த கத்தோலிக் ப்ராடெஸ்டண்ட் வகுப்பார்கள் அப்போதும் தேசாபிமானமின்றி யிருந்ததில்லை. கத்தோலிக் வகுப்பவர் எலிஸபத்தை இங்கிலாந்திற்கு இராணியாக்கக் கூடாதென்றும், பிராட்டெஸ்டண்ட் வகுப்பவர்கள் அவ்வம்மைதான் இராணியாக விருக்க வேண்டுமென்றும் வாதாடிக்கொண் டிருக்க ஸ்பெயின்தேசத்து அரசனாகிய பிலிப் என்பவன் கத்தோலியர்களடங்கிய ஓர் பெரிய சைன்யத்தை இங்கிலாந்தின் மீது படையெடுக்க அனுப்பினான். "நம் துருப்பு முழுதும் கத்தோலியர்களாக்கப்பட்டிருப்பதாலும், எலிஸபெத் அம்மையின் விரோதியாகிய இங்கிலாந்தின் கத்தோலியரும் நம்மைச்சேர்ந்துகொண்டு இங்கிலாந்திற்கு விரோதமாகச் சண்டையிடுவார்கள்" என்று எண்ணிக்கொண்டு அம்மன்னன் 1588-ம் வருஷம் மே மீ லிஸ்டன் என்ற துறை

முகப்பட்டினத்திருந்து 130 பெரிய கப்பல் துருப்புகளை யனுப்பி ஞன்; 30,000 ஸோல்ஜர்களையும் 2600 துப்பாக்கிகளையும் அடக்கி யிருந்தமைபற்றி, அவற்றிற்கு 'ஸ்பானிஷ் ஆர்மடா' என்றபெரும் பேரொன்று கொடுக்கப்பட்டிருந்தது. இப்பெரிய கடற்படை இங்கிலாந்தினருகில் அணுகலும் அந்த இரு கட்சிக்காரர்களும் தங்கள் சண்டையை ஒரு புறத்தே எடுத்துவைத்து விட்டுச் சண்டைக்கு ஆயத்தமாயினர். எலிஸபெத் அம்மையே டில்பரிக்குச் சென்று ஆங்கிருந்த கத்தோலிக் சைன்யங்கள் மனத்தில் தேசாபிமானம் பரவிநிற்கப் பிரஸங்கம் செய்தனராம். ஆனது பற்றிப் பகலவன் வெளியாகுமுன்னர், மனிதருடைய காரியவலித்திக்குக் காரணமாகிய ஸாமர்த்தியத்தால் அந்த இங்லீஷ்கார்கள் தங்களுக்கு என்றும் அழியாத ஜயத்தையும் சத்துருக்களுக்குத் தங்களிடத்தில் நீங்காத பயத்தையும் உண்டாக்கிவிட்டார்கள். இவை கட்கெல்லாம் காரணம் தேசாபிமானமும் ஒற்றுமையுமே யல்லவா?

S. Vivekanandhan.

கடவுள்.

உலகின்கண்ணுள்ள சராசரங்கள் யாவற்றையும் படைத்தளிப்பவர் கடவுளேயாம். நெருப்பு ஓர் இடத்திலே மறைந்திருப்பினும் ஆங்கு நிகழும் தூமத்தினல் எங்ஙனம் தீயிருத்தலை நிச்சயித்தறிகிறோமோ அதுபோலவே கடவுள் நமது புறக்கண்களுக்குத் தோற்றமல் ஒளித்திருப்பினும் அப் பரமபதியினுடைய ஆக்ஞையினலே இவ்வுலகி லியங்கிவரும் சேதனு சேதனப்பொருட்களினலும், அவற்றின் அற்புதச் செயல்களினலும் ஒரு தலைவன் இருந்து தான் நடாத்தல் வேண்டுமென உறுதியாக நாம் அறிந்து கொள்ளல்வேண்டும். கடவுளின் பிரதாபத்தைக் கற்றறிந்த பண்டித சிரோமணிகள் கூறவேண்டியிருக்கக் கல்வியறிவில்லாக் கடையவருட் டலைமைபெற்ற யான் கூறப்புகுந்ததற்கு என் அவாவே காரணமாகும். பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்னும் பஞ்சபூதங்களும், பிறபொருள்களும் அரிய தாத்திரியிலே (தாத்திரி- பூமி) எங்கும் நிறைந்திருப்பினும், ஸர்வக்ஞராகிய கடவுளுடைய கட்டளையின்றி ஜடப்பொருளாகிய அவைகள் யாவரும் ஆச்சரிய முறும்வண்ணம் ஒழுங்காக நடைபெறமாட்டா.

நாம் வஸிக்கும் இந்தப் பூமண்டலமும் இதைப்போன்ற அளவி லாப் புவனங்களும் ஆகாசத்திலே அந்தரத்திலே இயங்குவதும், மதித்திடற்கரிய அகலமும், ஆழமுங்கொண்ட கடல் பூமியை நாற்புறமுஞ் சூழ்ந்திருந்தும் அது யாதொரு வரம்புமின்றித் தன் எல்லைக்குட்பட்டிருப்பதும், அம்புலி, ஆதித்தன், ஆதியாகவுள்ள கிரகங்கள் முதலியவை காலக்கிரமந்தவறாது இயங்கி வருவதும், பசுவர்க்கத்துட்பட்ட மானிடராகிய நாமும் நீர்வாழ்வன, ஊர்வன, பறப்பன, விலங்குகள் முதலான பிராணிகள் தத்தமக்கு ஏற்றபடி சுகித்து வாழ்தற்குரிய வழிகளமைந்திருப்பதும், பரமகருணாநிதி யாகிய ஸ்ரீபரமேசுவரப் பிரபுவின் அளவிலாக் கருணையினாலும்; வல்லமையினாலுமேயாம். அத்தகைய கடவுள் எட்டுக்குணங்க ளோடு விளங்குவர். அவையாவன: தன்வயத்தனாதல், தூய வுடம் பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல் பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்ற லுடைமை, வரம்பிலின்ப முடைமை என்பனவாம். எழுத்துக்க ளெல்லாம் அகரவெழுத்தை முதலாகவுடையன; அதுபோல இவ்வுலகத்திற்கும் பிறவுலகத்திற்கும் முதலாகவுள்ளவர் ஆதி பகவான் ஆவர். ஒருவன், எவ்வளவு கல்வியறிவுள்ளவனாக விருப்பி னும், உண்மையறிவுடைய சச்சிதானந்த மூர்த்தியாகிய கடவுளின் திருவடி மலர்களை வணங்கானாயின், அவன் கற்றறி மூடனென்று கருதப்படுவன்; கடவுளுடைய சழலடிகளைச் சிந்திப்பவர்களிட த்து, துன்பம் அணுக அஞ்சும். நல்வினை தீவினை என்னும் இரு வினைப் பயனையும் நமக்கு நுகர்விக்கும் கடவுளைக் கனவினும் மறத் தலாகாது. நல்வினையை, அனுபவிக்குங்காற் களிப்புறலும், தீவி னையை அனுபவிக்குங்கால் துன்புறலும் மனிதர்முதலியோர் இயல்பு. அவரவர்செய்த வினைப்பயனை அவரவரே அநுபவித்துத் தான் தீரவேண்டும். தீவினையை யநுபவித்தற்பொழுது மறந்துங் கடவுளை நிந்தித்தலாகாது. ஒருவன் கடவுளுடைய காரியத்தைச் செய்யும்போது தேள் ஒன்று அவனைக்கொட்ட, கடவுளுக்குக் கண் ணில்லைபோலும்! ஐயையோ! என்று கடவுளை நிந்தித்து அழுது கொண்டிருந்தான். அங்ஙனம் ஈசுவரனை நிந்தித்து அழுதது நியா யந்தானா வென்று ஆராயின் அது பொருந்தவே பொருந்தாது; ஏனெனில் தேட்கொட்டும் அச்சமயம் அன்னான் பாம்பு கடித்திறந் திருத்தல் வேண்டும். கடவுளுடைய கைங்கரிய வசத்தனாயிருந்த காரணத்தால்கடவுள் கருணைகூர்ந்துபரியாயமாகத்தேளைக்கொட்டு

வித்துச் சிறிது துன்பமடையச் செய்து உயிர்ப்பிச்சை தந்தன ரென்றே என்னல் வேண்டும். கடவுளை நம்பி வழிபடுவோர்க்குத் தீவினை முற்றிலும் அகன்றொழியாவிடினும், அது இலகுவாக முடியாமலிராது. ஆதலின் துன்பம் நேரிடின் பகவானை நிந்தித்தல் எவ்வாற்றானும் நன்றன்றாம். சர்வஜீவதயாபரராகி விளங்கும் கட வுள் கிருபைக்கு நாம் அனைவரும் பாத்திரராகிக் கடைத்தேற வேண்டுமென்பதே சிறியேன் கருத்து.

நா. அரங்கசுவாமி சாஸ்திரி,

திருநெய்த்தானம்.

அறன்வலி யுறுத்தல்.

தருமஞ் செய்தலால் விளையும்பயனை உரைப்பதா லிதற்கு

அறன் வலியுறுத்த லென்றார்.

உறக்குந் துணை யதோ ராலம்வித் தீண்டி
யிறப்பனிழற் பயந்தா அங்-கறப்பயனுந்
தான்சிறி தாயி னுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.

(இ - ள்) நகத்தினுற் கிள்ளி யெடுக்கக்கூடிய பருமனுள்ள தாகிய சிறியவோர் ஆலவித்தைப் பூமியிலிட அது நிலத்தைக்கீண்டு வெளியாகி, செடியாகி, மரமாகி விசாலமுற்று இலைகளாற்படர, "தெள்ளிய வாலின் சிறு பழத்தொருவிதை......மன்னர்க்கிருக்க நிழலாகும்மே" என்ற முன்னோர் வாக்கியத்திற்கிணங்க நிழலைத் தருமாபோல் தன்னுலியன்றதை வுகந்துகொடுக்கும் தருமத்தைச் செய்ய முபனுவது சொற்பமேனும் அவ்வறமானது பெருமையிற் சிறந்தோர் கரமுற வடைந்தால் அது தினையளவாகிலும் பனையள வாகக்கொள்வர். "காலத்தினுற் செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப்பெரிது" எனத் திருக்குறளில் சொல்லியவாறு போல அப்பயன் ஆகாயத்தைச் சிறிதாக மூடிக்கொள்ளும். அஃ தாவது ஆகாயத்தினும் பெரிய தென்பதே. மற்றெல்லா விஷயங் களினும் மேலானது தருமஞ் செய்வதைவிட வேறு சிறந்ததில்லை யென்பதற்கு ஔவையாரும் "அறம்செய விரும்பு" யென்றாள். இவைகளெல்லா வற்றையும் உற்று நோக்குமிடத்து இம்மையிற்

செய்த அறமே மறுமையிலாகினுஞ் சுகமடையச் செய்யு மென்பதற்கு ஐயமில்லை. எங்ஙனமெனில் சிவிகையிலேறிச் செல்பவனும் மனிதனே; அதைச் சுமந்துகொண்டு போமவனும் மனிதனே. இவ்விருவரில் பேதம் தோன்றப்படாததலால் யிதை நெஞ்சுறத் தேர்ந்து மும்மையில், ஈகையறிந்தவன் சிவிகைமே லிருக்கிறானென்றும், ஈகையறியாதவன் சுமக்கிறானென்றும் சொல்லாமலே தெரியலாகும். ஆகையால் நம்மாலியன்ற தருமங்களைச் செய்தால் மறுமையிலாயினும் சுகமடைந்து வாழ்வோ மென்பது திண்ணம்.

ஒருவன் சொற்பவுதவியைத் தக்கோரிடஞ் செய்து அவன் பெற்ற பெரும்பேற்றை யிங்குரைப்பாம்.

துங்கபத்ரா நதிதீரத்திலுள்ள பம்பை யென்னும் கிராமத்திலே வறுமையுற்ற மாயணன் தவத்துதித்த மாதவாசாரியார் இளமையிலேயே செல்வராக வேண்டு மென்னும் பேராவலோடு கல்வி கற்றுவந்தார். தமதெண்ணம் விரைவிலே கைகூடாமையால் திருமகளையும் கலைமகளையும் நோக்கித் தவஞ்செய்யும் பொருட்டுக் காட்டிற் சென்று திரிவாராயினர். ஒருநாள் அக்காட்டில் அரசனுடைய மாடுகளை மேய்த்துத் திரிபவனாகிய புக்கண னென்னுமொரு க்ஷத்ரியனைக்கண்டு தாம் அநுபவிக்கும் கஷ்டத்தை யெடுத்துக் கூறினார். அதைக்கேட்ட அவன் அவர்மீது பேரிறக்கமுடையவனாய், அவர்க்கு தினந்தோறும் வேண்டிய பால் கொடுப்பதாக வாக்களித்தான். அதற்கு இவர் அரசனுக்குரிய பாலை யான் பெறுதல் துரோகமாகுமே யென்ன, புக்கணன், அரசனுக்கு அளவுக்கு மேற்படப் பாலிருத்தலால் அவமாகவே யொழுகிப்போகிற பாலிலொரு சிறுகூறு தவம்புரிகின்ற வுமக்குப் பயன்படுதல் அவனுக்குப் புண்ணியம் பயக்குமேயென்ன, இவர் அந்தப்பாலை யேற்றுக்கொள்ள வுடன்பட்டனர். இப்படித் தினந்தோறும் புக்கணன்மீது பேரன் புடையவரானார். உணவின் கவலை தீர்தலும் மாதவர் தாமெண்ணிய தவத்தைப் பேரூக்கத்தோடு முயன்று செய்து வந்தார். நெடுங்காலங் கழிந்த பிறகு கலைமகளும் திருமகளும் புக்கணனுக்குத் தோன்றி, மாதவர்கருத்து இப்பிறப்பிலே நிறைவேறாதென்று கூறிப்போக, அவன் அந்தச் செய்தியை மாதவர்க்குக் கூறினான். அது கேட்டும் மாதவர் தம் தவத்தை விடாது செய்து

வந்தார். இறுதியிலே அவர் கோபங்கொண்டு தமது பூணூலை யறுத்தெறிந்து விட்டுச் சந்நியாஸியாயினர். அதைக்கண்ட திருமகளும் கலைமகளும் வெளிப்பட்டு, இனி உனக்கு வேண்டியதைக் கேட்கக்கடவை யென்ன, இவர் கலைமகள் அநுக்ரஹ மொன்றே வேண்டுவது; திருமகள் அநுக்ரஹத்தை யினி வேண்டேன். ஆயினும் திருமகள் அநுக்ரஹம் புக்கணனுக் குண்டாகுக, அவனே நமதருளை யான் பெறுதற்குக் காரணமாயிருந்த பரமோத்தமன் என்றனர். அது கேட்ட இரண்டு தேவியரும் மனமகிழ்ந்து மறைந்து போயினர். இது நிகழ்ந்த சில நாளில் அஸ்தினபுரத் தரசன் இறக்க, அவனுடைய மந்திரிமார் பட்டத்துயானையை அலங்கரித்து அபிஷேக குடத்தை அதன் கையிற்கொடுத்து ஓராசனைக் கொண்டு வரும்படி பரிசனங்களோடு விடுத்தனர். அது பல நாடு காடுகளைக் கடந்து புக்கணனிருக்குங் காட்டை யடைந்தது. அந்தச் சமயத்தில் புக்கணன் நித்திரை செய்து கொண்டிருந்தான். யானை அவனைக்கிட்டி, அவன்மீது கங்கை நீரைச்சொரிய, அவன் துயிலினின்றெழுந்து பார்த்தான். யானை, அவன் கழுத்தில் மாலையைச் சூட்டி வணங்கி அவனைத் தூக்கித் தன் முதுகின்மேலுள்ள தவிசின்மேலிட்டுக் கொண்டுபோய் அரசனாக்கிற்று.

அப்பால் சில நாள் கழிந்தபிறகு மாதவாசாரியார், புக்கணன் தம்மேற் கொண்ட அன்பை அரசனாயிருக்குங்காலத்திலும் சாதிப்பவனோவென்று சோதிக்கும்பொருட்டு அவனிடத்தே சென்றனர். இவர் வரவை யொற்றரா லறிந்த புக்கணன் முன்னினும் மிகுந்த அன்பும் வணக்கமும் அடக்கமும் நட்பு முடையவனாய் நடந்தெதிர்கொண்டு தழுவிக்கொண்டாடி அவரைத் தனக்குப் பிரிய நண்பராக்கிக் கொண்டு, எந்தக் காரியமும் அவரது கருத்திற் கிணங்க வுசாவி நடத்தி வருவானாயினன். வித்தியாரண்யர் என்பது இவருக்குத் தீக்ஷா நாமம். நாற்பதினாயிரம் சுலோகமுடைய சங்கர விலாசம் என்னும் நூலைச் செய்தவராதலால், இவரின் சரிதையை யிங்கெழுதத் துணியுற்றனன்.

ஆகையால், ஒருவன் தான் செய்யும் தருமம் சிறிதேனும் அத்தருமம் தக்காரிடஞ் சேர, இம்மையிலேயே நற்சுகத்தை அடைந்தா னென்றால், இனி அவன் மறுமையில் அடையுஞ் சுகத்தைச் சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம்.

வீ. ஆ. குப்புவேல், எடமன்.

சூடாலே.

(208-வது பக்கத் தொடர்ச்சி)

காசிகா:—ஏனவ்வாறு கூறுகின்றீர்; ஜனகன் அஜாதசத்துரு முதலிய வேந்தர்போன் றிருத்தல் உமக்குக் கூடாதோ? சாட்சி மாத்திரமா யிருக்கும் நிலேயினை யறிந்தொழுகினல் ஒரு கவலேயு மில்லாது வாழ்தலாமே!

சிகி:—சாட்சி மாத்திரமாக விருக்கும் நிலே யெனக்கு விளங்கவில்லே. இதுபற்றி முன்னர்ச் சிவப்பிரகாச - சரபாத்திர சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றனர். அதனை ராஜ்ஜிய வியவகாரத்தின் மிகுதிப் பாட்டால் மறந்து விட்டனன். தாங்கள் சாட்சி மாத்திரமாக விளங்குவதற் குரிய மார்க்கத்தைப் போதித்தருளல் வேண்டும்.

காசிகா:—எவ்விடத்திருந்து நினைவெழுகின்றதென்று கூர்மையாகக் கவனித்து வருவீராயின், சாட்சி மாத்திரமாக விளங்குவது உமக்கு வாய்ப்பதாம். சாட்சி மாத்திரமாகவிளங்குகின்றவர்க்கு இல்லறம் துறவற மென்பன ஏக வடிவாகவே யிருக்கும். நீர் காட்டுக்குத்தவஞ் செய்யப் போகின்றீ ரென்று கேள்விப்பட்டேன். காட்டிற்குப் போவது அநாவசியகமாம். நீர் இல்லறத்திலிருந்தே புருஷார்த்தத்தைப் பெறலாம். ஒன்றும் இனி ஆலோசனை செய்ய வேண்டாம்.

சிகி:—ஆலோசிப்பதற்கு யாதும் இடமில்லேயே! கூடுமான வளவும் தாங்கள் திருவாய் மலர்ந்தருளிய வாறே செய்கின்றேன்; சுவாமிகள் காசிக்குப் போனல் ஸ்ரீசுப்பய்ய சுவாமிகளுக்கு எங்களது நமஸ்காரத்தைத் தெரிவிக்கு மாறு பிரார்த்திக்கின்றேன்.

காசிகா:—யான் வந்து வெகு நேரமாயிற்று.

சிகி:—சுவாமிகள் எழுந்தருளலாம்.

காசிகாநந்தர் போகின்றர்.

யாவரும் அவரை வணங்குகின்றனர்.

மூன்றாவது அங்கம்.

இரண்டாவது காட்சி.

பாத்திரம்:—சூடாலை, சிகித்துவசன்.

இடம்:—மாளவதேசம். அந்தப்புரம் சயநக்கிருகம்.

காலம்—இரவு 10–மணி.

சூடாலை:—யோகபாவனையாலும் ஞானபாவனையாலும் யான் சித்த சாந்தியை யடைந்திருப்பது மகாராஜாவுக்கு ஒருவாறு தெரிந்து விட்டது. அவர் ஒருபோது விருப்பாகவும் மற்றொருபோது வெறுப்பாகவும் நம்மிடத்து நடந்து கொள்ளுவதற்கு யாதாவதொரு காரண மிருத்தல் வேண்டும். அக்காரண மின்னதென்று விளங்க வில்லை. எவ்வாறு நடந்து கொண்டாலும் அவர் நம்மை விட்டுப் பிரியாவாறு செய்து கொள்ளல் வேண்டும். மணி பத்தாயும் மகாராஜா வாராதிருப்பதற்குக் காரண மென்ன? ஏதோ ஒரு சத்தம் கேட்கின்றது. அது மாகாராஜாவின் காலடிச் சத்த மாயிருக்கலாம். வேறு யார் வருதல் கூடும்?

சிகித்துவசன் பிரவேசம்.

சிகித்துவசன்:—காசிகாநந்த சுவாமிகள்கூறியவாறுஒழுகுவது நமக்கொரு வகையாலும் முடியாது. நினைவெழு மிடத்தைப்பார்ப்பது அரிய வற்றையெல்லாம் அரியவாய செயலாம். இது குடும்ப வியவகாரமில்லாதவர்க்கன்றி மற்றவர்க்குச் சித்தியாது; சித்திக்குமாயின், அஃது ஊசியின் காதில் ஒட்டகம் நுழைந்தது போலவாம். நமக்கோ வயதாய் விட்டது; காலத்தை வீணே கழித்து விட்டோம்; இனியாவது ஆத்மலாபமாகச் செய்தற்குரியதை ஏகாந்தமாய விடத்திருந்துசெய்தல்வேண்டும்; இங்கிருந்தால் காசிகாநந்த சுவாமிகள் கூறியவாறு செய்வது முடியாது. கூடிய சீக்கிரததில் நாம் காட்டிற்குச் சென்று சாதிக்கத் தக்கதைச் சாதித்தல் வேண்டும். ஆ! என்ன ஆச்சரியம்; கூடிய சீக்கிரத்தில் என்று நினைத்ததும் பெருந் தவறு. நம்முடைய உயிர்வாழ்க்கை

பழியாதிருந்தாலன்றோ அவ்வாறு கருதலாம். மேகத்தில் தோன்றும் மின்னல் போல விரைந்து கெடும் இவ்வுடம் பிற்கு ஒரு கால வெல்லையைக் குறிப்பித்துக் களிப்பது அறிவுடைமையாமோ? கூடுமானல், இன்றிரவே காட்டிற் குத் தனியே செல்ல முயலுவோம்.

(வெளிப்படையாய்) சூடாலே என்ன செய்கின்றாய்?

சூடா:—வாருங்கள், வாருங்கள்; இன்றேன் இவ்வளவு நேரமா யிற்று? நெடுநேரம் விழித்துக் கொண்டிருந்தால், தேக அசௌக்கிய முண்டாகுமே! இம் மலர்ச்சயனத்தில் சயனி யுங்கள்.

சிகி:—மண்ணுண்டு போகும் இவவுடம்பிற்கு மலர்ச்சயனமா வேண்டும்? இவ்வுடம்பைப் போஷிப்பதால் என்ன பயன் வரும்? எங்கே யாகிலும் இஷ்டம் வந்த போது சயனித்துக் கொள்ளுகின்றேன்; அதுபற்றி நீ கவலை கொள்ளாதிரு.

சூடா:—இன்றைபதினம் தாங்கள் பேசுவது மிகுஆச்சரியமாயிருக் கின்றது; ஒருகாலும் தாங்களிவ்வாறு பேசியதில்லையே! ஐயோ! சிவமே! இவ்வாறுய வார்த்தைகளைக் கேட்கவோ பிரமனென்னைப் படைத்தான்! அரகரா! மகாதேவா! சங்க ரா! எமது மகாராஜாவிற்கு நற்புத்தி யருளுதல் வேண்டும்.

(ஓலமிட்டு அழுகின்றாள்)

சிகி:—(சூடாலையின் கையைப் பிடித்துக்கொண்டு) என்ன பேச் சுப் பேசுகின்றாய் சூடாலே! யான் கூறியதன்கண் தவ றிருந்தால் கூறு!

சூடா:—மகாராஜா வாக்கிற் கெதிர்வாக்குண்டோ? இல்லையா யினும், யான் சொல்வதைக் கேட்டருளல் வேண்டும். புரு ஷனுக்கு மனைவியே தனமாமென்பதைத் தாங்களிப்போது மறந்து பேசுகின்றீர்கள். புருஷனுக்கு மனைவியைத்தவிர மற் றவர் உத்தமமாய நட்பினராகா ரென்பதைத் தாங்கள் நினை க்கவேயில்லை யென்றெண்ணுகிறேன். இப்போது பேசியபேச் சால் தாங்கள் சரீரத்தின்மீது வெறுப்படைந்திருக் கின்றீர்க ளென்றுணர்கின்றேன். சுவரை வைத்துக்கொண்டன்றே சித் திரமெழுதுதல் வேண்டும். சரீரத்தை வருத்தினுல் அதனு லாம் பயனை யடைவது எவ்வாறும்? தங்களது சரீரத்தைப்

போஷிப்பது எனது முக்கியக் கடமைகளுள் ஒன்றுமன்றோ? தாங்கள் 'மண்ணுண்டு போகும் இவ்வுடம்பிற்கு மலர்ச்சயன மா வேண்டும்' என்று கூறியது என்மார்பில் அம்பு நுழைந்தது போலிருக்கின்றது. கற்கண்டு சேர்த்துக் காச்சிய இப் பாலைச் சாப்பிடுங்கள்; சயனித்துக் கொள்ளலாம் வாருங்கள்.

சிகி:—சயனிப்பதிருக்கட்டும்? யான் சில தினங்கட்குமுன் புதுமையாகப் பேரழகு பெற்று வருமுன்னைக் கவனித்து நோக்கிப் "பண்டையிள நலமீண்டும் படைத்தனைபோல் அலங்காரம் பலபெற்றாய்போல், அண்டாமுதுண்டனைபோல் ஆர்க்குமுற வரியபத மடைவுற்றாய்போல், மண்டுகின்ற ஆனந்தம் நிறைந்தனைபோற் பொலிகின்றாய் மாசிலாளே" என்று வினவியதற்கு நீ மகா ஞானிகள் போல யான் ஆத்மஞானத்தை யடைந்திருப்பதால் இவ்வாறு பேரழகோடு விளங்குகின்றேனென்று கூறினையன்றோ? அவ்வாறு பேசிய நீ இன்று இவ்வாறு பேசுவதன் காரணம் எனக்கு விளங்கவில்லை.

சூடா:—(நெடுநேரம் ஆலோசித்து) இவரின்று இவ்வாறு கூறுவதற் கொரு காரணமிருத்தல் வேண்டும்; அது காசிகாநந்த சுவாமிகளது உபதேசமாகத்தானிருத்தல் வேண்டும்; இல்லாவிட்டால் இவரின்று இவ்வாறு பேசுவாரா? அவருடைய வுபதேசம்இப்போதுநமக்குக்கிணறுவெட்டப் பூதம்புறப்பட்டது போலாயிற்று. "ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும், அன்றி யதுவரினும் வந்தெய்தும்-ஒன்றை, நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்,எனையாளு மீசன் செயல்" என்று நமது ஞானத்தாயருளியது பொய்யாமோ? (வெளிப்படையாய்) எவ்வாறு பேசினேன்? நான் பேசியது சாஸ்திர விரோதமாயதோ? சொல்லுங்கள்.

சிகி:—கல்வியி னெல்லையைக் கண்ட கட்டழகி! நீ பேசுவது சாஸ்திர விரோதமாவ தெவ்வாறும்? (சிரித்துக் கொண்டே) ஆனல்,

சூடா:— ஆனல் என்று சிரித்துக் கொண்டே நிறுத்துவிட்டீர்கள் அதனைத் தொடர்ந்து சொல்லுதல் வேண்டும்.

சிகி:—தொடர்ந்தா சொல்லவேண்டும்? எல்லாம் பொய்;ஏகரசமான பிரஹ்மமே மெய். அதனை யான்என்றுசந்தேகவிபரீதமின்றித்

தேகத்திரய சாட்சியாயறிந்தவர் இனி பிறப்பதென்பதில்ல வேயில்லை; யான் ஏகாசமாய பிரஹ்மத்தைச் சமாதி கூடிச் சந்தேக விபரீத மில்லாதறிந் திருக்கின்றேன்; எனக்குச் சுக துக்க முதலியவற்றுள் ஒன்று மில்லை; அதனாற்றான் யான் புதுவதாய பேரழகோடு பிறங்குகின்றேனென்று பெருமை யாகப்பேசியநீ இன்றுபேதையினும் பேதையாய் நின்றுபெரு மூச்செறிந்து, ஏதேதோ பேசியழுவது மிகு வேடிக்கையாக இருக்கின்றது.

சூடா:—கணவனது நோய்க்குத் தக்க மருந்து அவனது காதலியே யாவள் என்று சாஸ்திரங் கூறுவது தங்களுக்குத் தெரியாத தன்றே! தாங்கள் வருந்த முறும்போது அதற்குப் பரிகாரமாயவார்த்தைகளைக் கூறுவது தவறுடையதாகாதே? தாங்களப்போது யாது கூறினீர்கள்? அதனை ஞாபகத்திற் குக் கொண்டுவந்தா லிப்போது இவ்வாறு பேசமாட்டீர்கள்.

கிசி:—என்ன பேசினேன்? சொல்.

சூடா:—இவ்வளவு சீக்கிரத்தி லதனை மறந்துவிட்டீர்களா? வஞ்சி யிடையாய்? நீ இயைபாதது சொன்னாய். அரசபோகத்தில் விளங்கும் நீ ஆத்மாவில் எவ்வாறு விளங்குதல் கூடும்? ஆத் மாவை யறிந்தவர் உலகத்தோடு கூடி வாழ்வரோ? என்றற் றொடக்கத்தனவாகப் பல கூறி யென்னை யிகழ்ந்தீரல்லவா?

சிகி:—ஆம்; ஆம்.

சூடா:—தாங்கள் என்னை முன்னரே அஞ்ஞானியென்றுதீர்மானித் திருக்க, இப்போதுவேறு பிரகாரமாகக் கூறுவது வியப்பாக வே இருக்கின்றது. அஞ்ஞானியின் வார்த்தை ஞானமய மாக விருப்பதாமோ? "மெல்லியாள் தோள்சேர்" என்று நம்மன்னையாருளியிருப்பதனை ஞாபகத்திற்குக்கொண்டுவரல் வேண்டும். "குலமகட்குத் தெய்வங் கொழுநனே" ஆதலால், எனக்குத் தங்களைத் தவிர வேறு தெய்வமில்லையாம். தங் கள் வாழ்விலேயே யான் கண்ணுங் கருத்துமா யிருக்கின் றேன். "தமது பிராணனை விட்டாவது கணவர்க்கு நன்மை யைச் செய்தல் வேண்டும்; இதுவே பெண்களுக்கு மேலான தருமமாம். இதற்கு மேற்பட்டதும் கௌரவமுடையது மாய காரியம் பிறிதொன்றில்லை" என்று பெரியார் வாயிலாக

என்பிதாவின் கிருகத்தி லுணர்ந்து, உணர்ந்தவாறு இதுகாறும் ஒழுகிவருகின்றேன். இதனை யான் அகங்காரத்தால் கூறுகின்றே னென்று கருதுதல் கூடாது. தங்களது மன வருத்தம் ஒழிதற் பொருட்டே இவ்வண்ணம் பல திறத்தன வாகப் பேசுகின்றேன். யான் ஞானியாக விருந்தா லிவ்வாறு பேசுவேனோ? தாங்க ளிப்போது பேசியவாறு இனி யெப்போதும் பேசாதிருக்குமாறு பிரார்த்திக்கின்றேன். பெண்ணென்றால் பேயு மிரங்கு மன்றோ? (வரும்.)

ஒரு நாயின் அன்பு.

பிரான்சு தேசத்திலுள்ள காட்டில் விறகுவெட்டி விற்றுப்பிழைத்துவந்த ஒருவன் ஒருநாள் தனது குதிரைவண்டியை யோட்டிக்கொண்டு தன்னூருக்குப் பத்துமைல் தூரத்திலுள்ள காட்டிற்குப் போனான். அவ்வண்டியுடன் அவனுடைய பெட்டை நாயும் சென்றது. அஃதப்போது கர்ப்பமாயிருந்தது. அவன் காட்டிற்பிரவேசித்தவுடன் சாப்பாட்டு மூட்டையையும் உடைகளையும் அந்த நாயின் வசத்தொப்புவித்து, விறகு வெட்டக் காட்டினுள் வெகு தூரஞ்சென்று விட்டான். அவன் சென்ற சிறிது நேரத்திற்குள் அந்தநாய் மூன்று குட்டிகளை யீன்றது. அவன் பொழுது போம் சமயத்தில் வந்துசேர்ந்து, தான் கொண்டுவந்த வுணவையுண்டு, உடைகளைத் தரித்துக்கொண்டு, அந்த நாயை வண்டியிலேற்றிக்கொண்டு, அஃதீன்ற குட்டிகளை யெடுத்துக்கொள்ள மறந்து தன்னூருக்கு வண்டியை யோட்டித் திரும்பினான். அக்குட்டிகளோ கண்திறவாமல் தனிமையாக வருந்திக்கிடந்தன. அவ்வண்டி வீடுபோய்ச் சேரும் பரியந்தம் அந்த நாய் படாத பாடு பட்டுக் கதறியது. அவன் அதனைக் கவனியாதுபோனான். அந்த நாய் வீடுசேர்ந்த அன்றிரவே தன் வீட்டை விட்டுத் தனது குட்டிகளுள்ள விடத்திற்குச் சென்று, அவற்றை ஒவ்வொன்றாக வாயால் நோவாது கவ்வியெடுத்துக்கொண்டு வந்து வீட்டிற் சேர்த்தது. அந்த இரவிலேயே அது மூன்றுமுறை பத்துமைல் தூரமுள்ள காட்டிற் கோடித்தனது குட்டிகளைக் கொண்டுவந்து சேர்த்தமை அதனது அன்பை நன்குவிளக்குவதாம். விடிந்த பிறகு அவ்விறகு வெட்டி புழைக்கடையில் தனது நாய் தானீன்ற மூன்றுகுட்டிகளை யணைத்துக்கொண்டு ஓரிரவில் அறுபது மைல்தூரம் நடந்த களைப்பால் இறந்து கிடப்பதையும், அக்குட்டிகளுயிரோடு சுகமாயிருப்பதையும் கண்டனன்.

வர்த்தமானங்கள்.

ஒரு பிரேத அறை விசேஷம்:—இத்தாலிய தேசத்தின் தெற்குப்பகுதியிலுள்ள பிரேத அறைகளுள் ஒன்று 3000 வருஷங்களுக்குமுற்பட்டதாம். அதில்வைக்கப்பட்டிருக்கும்செயற்கைப்பூக்கள் முதலியன சிறிதும் சேதமடையா திருக்கின்றனவாம்.

ஒரு குருட்டுப்பெண்ணின் திறமை:—ஐரோப்பாவிலுள்ள சுவீடன் தேசத்தில் வசிக்கும்ஒரு குருட்டுப்பெண் ஷார்ட்ஹாண்டிலும்,டைப்ரைட்டிங்கிலும் மிகுந்த தேர்ச்சி பெற்றிருக்கின்றாள். இவள் ஷார்ட்ஹாண்ட் வித்தையை ஒருவகை யந்திரத்தி னுதவியைக்கொண்டு கற்றுக்கொண்டனளாம்.

மின்சாரத்தால் சுத்தஞ் செய்யும் பால்:—இங்கிலாந்திலுள்ள லிவர்ப்பூல் நகர முனிசிபாலிடியார் சிசுக்களுக்கும் குழந்தைகளுக்கும் சுத்தமான பால் கிடைக்கும்படி மின்சார வுதவியைக்கொண்டு பாலைச் சுத்தஞ் செய்துகொடுத்து வருகின்றனர். இங்கும் அவ்வாறு செய்யப்படுமாயின், மிகவும் நலமுண்டாவதாம்.

ஒரு சிறுவனது பெருஞ்சம்பாதனை:—பிரான்சு தேசத்திலுள்ள ஓர் உயர்தரப்படக்காட்சிக்கம்பெனியில் வேலைசெய்துவந்த தேபாஸ் என்னும் 7 வயதுள்ள ஒரு சிறுவன் ஒரு வருஷத்தில் 4000 பவுன் சம்பாதித்தானும்.

அமெரிக்காவில் ஸ்திரீகளுக்குச் சுதந்தரம்:—ஐக்ய மாகாணங்களைச் சேர்ந்த நாடுகளில் ஒன்றாகிய மெஸ்ஸாசுஸெட்ஸ் என்னும் நாட்டில் பார்லிமெண்ட் போன்ற பிரதிநிதி ஸபைக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்க வோட்கொடுக்கும் பாத்தியம் ஸ்திரீகளுக்கும் உண்டென்று அந்நாட்டுப் பிரதிநிதிசபை தீர்மானித்துவிட்டது.

குழந்தைகளைப்பாதுகாக்குமுறை:—ஜினேவாதேசத்துமுனிசிபாலிடியார் குழந்தைகளின் பிறப்பைப் பதிவு செய்பவரிடத்துக் குழந்தைகளைப் பாதுகாக்கும் முறையைப் போதிக்கும் ஒரு புத்தகத்தைக் கொடுக்கின்றனர்.

நிஜாம் அரசரின் நீதி:—ஐதராபாத் நிஜாம் அரசர் ஒருநாள் வெளியே உலாவ வந்தபொழுது, ஏராளமான நகைகளணிந்த ஒரு யௌவன ஸ்திரீ அரண்மனைப் பக்கத்தில் தாராளமாய் உலாவிக் கொண்டிருந்ததைக் கண்டு, அவளைப்பற்றி விசாரித்தபொழுது அவள் அரண்மனைத் தோட்டத்திலுள்ள சாதாரண வேலைக்காரி யென்றும், மாதம் 150 ரூபாய்ச் சம்பளம் வாங்கும் மென்ஸப்தார் என்னும் ஓர் உத்தியோகஸ்தரின் வைப்பாட்டி யென்றும், அவள் மீதுள்ள காதலால் அவர் தமது மனைவி மக்களைக் கவனியாது விட்டு, அவளுக்காகவே தமது வரும்படிகளைச் செலவிடுகிறாரென்றும் தெரியவந்தன.

பின்னர், அரசர் மேற்குறித்த உத்தியோகஸ்தரையும் அவர் மனைவியையும்தருவித்து விசாரித்தபொழுது, கடைசியாக உண்மை வெளிப்பட்டது. அதன் மீது அவர் அவ்வுத்தியோகஸ்தர்க்குரிய சம்பளத் தொகையை அவர் மனைவிமக்களுக்குக் கொடுக்கும்படி ஏற்பாடுசெய்து, குறித்த உத்யோகஸ்தர் ஒரு சாதாரணக் கூலிப்பெண்ணைக் காதலித்திருப்பதால், அவர் சாதாரணக்கூலியாகவே கருதப்பட்டுத்தோட்டவேலைக்கு அனுப்பத்தக்கவர் என்று தீர்மானித்தார் என்று "இந்துப்பேட்ரியட்" பத்திரிகை எழுதுகின்றது.

கவர்னர்கள் வயது:—வங்காளம், பம்பாய், சென்னை என்னும் இம்மூன்று மாகாணக் கவர்னர்களுள் வங்காளக் கவர்னராகிய லார்டுகார்மிக்கேலே வயதிலும்ஸெர்விஸிலும் முதிர்ந்தவரென்று சொல்லப்படுகின்றது. லார்டு கார்மிக்கேலின் 55-வது வருஷப் பிறந்தநாள் சில தினங்களுக்குமுன் கொண்டாடப்பட்டது. அவர்க்குக் கீழுள்ள உத்தியோகஸ்தர்கள் இச்சமயத்தில் அவர்க்கொரு வெகுமதி கொடுத்தனர். சென்னைக் கவர்னர் லார்டு பெண்ட்லண்டுக்கு இப்பொழுது 54 வயதாகின்றது; பம்பாய்க் கவர்னர் லார்டு வில்லிங்டனுக்கு 48 வயதாகின்றது.

கம்பியில்லா டெலிபோன்:—கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடித்த மார்க்கோனி யென்னும் இத்தாலியர் இப்போது கம்பியில்லா டெலிபோனைக் கண்டுபிடித்து, அங்கு அதனை உபயோகத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார்.

அரணையால் நேர்ந்த மரணம்:—திருநெல்வேலி ஜில்லா நாஸரத்தை யடுத்த கச்சினுவிளை கிராமத்தைச் சேர்ந்த பாட்டக்கரை யென்னும் ஊரில் ஒரு விதவை கறிசமைத்துக் கொண்டிருந்தபொழுது ஒரு செவ்வரணை கறிச்சட்டிக்குள் விழுந்து செத்துப்போயிற்று. அவள் அதனை யெடுத்துப் போட்டுவிட்டுத் தானும் தன் மக்களுமாக அக்குழம்பை உபயோகித்துக் கொண்டாள். உடனே அவளும் அவள் இரண்டு பிள்ளைகளும் சென்ற மாதம் 24-ந்தேதி மரணமடைந்தனர்.

விவாகமாகாத பெண்கள்:—ஸயாம் நாட்டில் பெண்களுக்கு விவாகமாகாது 35 வயதாய்விடின், அவர்கள் அரசரால் பாதுகாக்கப்படுவார்களாம். பின் அவர்களுக்கு விவாகஞ்செய்து வைக்கும் பொறுப்பு அரசரைச் சார்ந்ததாம். அப்பெண்களுள் எவளையேனும் மணந்து கொள்வதாக அந்தநாட்டு ஜெயில் கைதிகளில் எவனுவது சம்மதிப்பானுயின், அவனை அரசர் உடனே விடுதலை செய்து விவாகஞ் செய்து வைக்கிருராம். அவன் முன் விவாகமானவனு யிருந்தாலும் பாதகமில்லையாம்.

வருஷத்திற்கு 291 முட்டைகள்:—ஒரு கோழி வருஷத்திற்கு 72 முட்டைகளிட்டால் அதுவே மிகவும் அதிகமாமென்று சொல்லப்படுகிறது. ஆயினும், புரொபசர் ஜேம்ஸ் டிரைடன் என்பவர் ஒரு கோழி வருஷம் ஒன்றுக்கு 261 முட்டைகளுக்குக் குறையாமல் இட்டிருக்கிற தென்று கூறுகிறார். சுத்தமாய் வளர்க்கப்பட்ட ஒரு கோழி 365 நாளையில் 282 முட்டைகளிட்டிருக்கிறதென்று கானடாவில் கணக்கிடப்பட்டிருக்கிறது.

வண்டிகளால் நேர்ந்த உயிர்ச்சேதங்கள்:—யுனைடெட் கிங்டமென்று கூறப்படும் இங்கிலாந்து, அயர்லாந்து தேசங்களில் சென்ற 1913-ம் வருஷத்தில் வண்டிகளால் நேர்ந்த விபத்துக்களால் இறந்தவர்களின் தொகை 44,748 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

கூந்தல் வியாபாரம்:—அமெரிக்கா நியூயார்க்கில் மிஸ் திப்ரனிவுஸ்தி யென்னும் ஒருநாடகஸ்திரீ இருக்கிறுள். அவளுடைய சுருண்ட கூந்தல் 5 அடி நீளமுடையதாம். அதில் அவள் 2½ அடி நீளக்கூந்தலைப் பாரிஸ் வர்த்தகரொருவருக்கு 10000 பவுண்டிற்கு விற்க ஏற்பாடு செய்திருக்கின்றுள். அக்கூந்தலைக் கத்தரிப்பதற்கு ஒரு பொன் கத்திரி செய்யப்பட்டு வருகின்றது.

காலில்லாதவர்:—இங்கிலாந்து தேசத்தில் மூன்று லட்சம் பேர் காலில்லாது பொய்க்கால் பூண்டிருக்கின்றனராம்.

பளிங்குக் கடிகாரம்:—ஜெர்மனியைச் சேர்ந்த பவேரியா நாட்டிலுள்ள ஒருவர் பளிங்கினால் ஓர் அற்புதமான கடிகாரத்தைச் செய்து முடித்திருக்கிறார். அந்தக் கடிகாரத்திற்குரிய சகல கருவிகளும் பளிங்கினாலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. அதனைச் செய்து முடிக்க ஆறு வருடங்கள் சென்றனவாம். இவ்வாறு செய்தும் அஃது உயிரற்ற உடம்புபோன்று ஓடாத கடிகாரமென்றே தெரியவருகிறது.

ஒரு கிறிஸ்தவப்பாதிரியார்:—ஞகத்லிங் என்பவர் பூட்டான் பக்கத்தில் வசிக்கும் மெச்சி என்னும் ஜாதியைச் சேர்ந்தவர்; இருபது வருடங்களுக்கு முன் இவர் கிறிஸ்து மதத்தை மேற்கொண்டார். அதனால் அவர் ஜாதியில் இப்பொழுது சுமார் 1500 பேர் கிறிஸ்தவர்களாய் விட்டார்கள். 1911-ம் வருஷத்தில் இவருக்கு உபதேசிப்பட்டம் கொடுக்கப்பட்டது

ஒரு புலிப் பிள்ளை:—திருச்சினாப்பள்ளியைச் சேர்ந்த உறையூரில் புலியின் வடிவம்பெற்ற ஒரு குழந்தை பிறந்திருக்கிறது. அதற்கு 32 பற்களும் கைகால்களில் புலியினுடைய நகங்களும் இருக்கின்றனவாம். உடம்பெங்கும் புலியுடம்பு போன்று வரிவரியாக விருக்கிறதாம். ஆனால் குழந்தை அமைதியுள்ளதாக இருக்கின்றதென்று சொல்லப்படுகிறது.

இனம்! இனம்!! இனம்!!

இந்தியாவின் மகிமை.

அநேக சாஸ்திரங்களையும் இதிகாச புராணாதிகளையும் ஆராய்ச்சிசெய்து பரோபகாரமாய் அச்சிட்டு இனமாய்க் கொடுக்கப்படுகிறது. இந்தியா தேசத்தின் பெருமைகளை நிரூபணத்தோடு வெளியிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் வாசிக்கவேண்டிய புத்தகம். விலாசத்தைத் தெரிவிப்போருக்கு இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

இன்றைக்கே உங்கள் விலாசத்தை யெழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி,
மணிசங்கர் கோவிந்தஜி,
ஆதங்க நிக்ரக ஔஷதாலயம்,
22, பிராட்வே & 96, மவுண்ட்ரோட், மதராஸ்.

ஏஜெண்டு:—
M. A. நெல்லையப்ப முதலியார்,
38, சின்னக் கடைத்தெருவு, திருச்சினாப்பள்ளி.